## 6.0 APPENDICES

i) The samples of the news cuttings that has the errors from the three Tamil Newspapers taken for the study.

# தமிழ் நேசன்

AKHBAR HARIAN TAMIL NESAN ESTD. 1924 தேசிய நாளேடு PP 508/1/96 MITA (P) NO: 026/04/96

கோலாலம்பூர்,
ஜூலை 2-
இந்துக்களின் இதிகாச
கதையான இராம
யணத்தைதழுவி நேற்று
முதல் தேசிய கலாசார
மையத்தில் எக்ஸ்பிரி
மெண்டல் அரங்கில்
நடைபெற்று வரும்
ராமா அண்ட் சீதா
நாடகத்தை உடனடி
யாக ரத்துசெய்ய வேண்
டும் என்று மலேசிய
இந்து சங்கம் நேற்று
கோ ரி க் கை வி டு த்
துள்ளது.

இந்த நாடகம் இந்து
சமயத்தை அநாகரீக
மாக சித்தரிப்பதுடன்
இழிவுபடுத்தும் வகை
யில் உள்ளது. இது
இந்துக்களை வெகுவாக
புண்படுத்தியிருப்பதால்
இந்நாடகம் அரங்
கேற்றம் காணுவதை
தங்கள் சங்கம் வன்மை
யாக எதிர்க்கிறது என்று
அச்சங்கத்தின் தலை
மைச் செயலாளர் ஆர்.
தியாகராஜன், நேற்று
தெரிவித்தார்.

சீத்தாவை அலங்
கோலமான வர்த்தக
பெண்மணியைப் போல
வும் அவரை கடத்தி
செல்கின்ற ராவணன்
டிஸ்கோ பேர்வழியைப்
போலவும் இந்நாடகம்
சித்தரிக்கிறது என்று
அவர் தெரிவித்தார்.

மலேசியா பல இனத்
தவர்களை கொண்ட
நாடு. சமயம் ஒரு
உணர்ச்சிகரமான விவ
காரமாகும். ஓர் இனத்
தின் சமயத்தை மதிக்க
வும் முக்கியத்துவம்
அளிக்கும் பண்பையும்
கொண்டிருக்கும் நாம்
டிஸ்கோ பேர்வழிகள்
போன்று ஓர் இனத்தின்
இதிகாச கதையை
சித்தரிப்பது வருந்தத்
தக்க ஒன்று.

கலாசார நிகழ்ச்சி
களை படைக்கும் ஏற்
பாட்டாள ர் க ளி ன்
நல்ல நோக்கத்தை
சங்கம் பாராட்டுகிறது.
ஆனால், சமயத்தின்
மூலக்கரு தவறாக
வியாக் கி யா ன ப்
படுத்தப்படுவதை சங்
கம் ஒருபோதும் அனு
மதிக்காது என்று அவர்
தெளிவுபடுத்தினார்.

-பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 14 |
| — | Unnecessary splitting of words. | – |
| ⊘ | Junction features | – |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 22 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊠ | Addition / Omission of a letter. | 5 |
| (\|) | Omission / Replacement of a word. | – |
| (T) | Unnecessary joining of words. | – |

கோலாலம்பூர், ஜூலை 2- நாடு முழுவதிலு முள்ள ஊனமுற் றோரைப்பதிவு செய்யும் இயக்கத்தில் இது வரை யில் பதிவு செய்து கொண்ட வ ர் க ளி ன் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில் இருப் பது குறித்து, தேசிய ஒற்றுமை மற்றும் சமூக மேம் பா ட் டு த் து றை அமைச்சு மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளது.

கடந்த மே மாதம் தொடங்கி இரண்டு மாதங்களாக நடை பெற்று வரும் இவ் வியக்கத்தில் இது வரையில் 200 அங்க வீனர்கள் மட்டுமே தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண் டுள்ளனர் என்று தேசிய ஒற்றுமை மற்றும் மேம் பாட்டுத்துறை அமைச் சர் டத்தின் படுக்கா சலேகா இஸ்மாயில் தெரிவித்தார்.

அவர்கள் எங்கிருக் கிறார்கள் என்ற விவரம் ஏதும் தெரியாமல், அர சாங்கம் ' அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய இயலாது என அவர் கூறினார். நேற்று கோலாலம்பூரில் நடை பெற்ற ஆசிய கண் பார்வையற்றோர் சங்கத் தின் நான்காவது மாநாட்டை தொடக்கி வைத்த பின்னர் செய்தி யாளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார்.

ஊனமுற்றோருக்கான வசதிகளை மேம்படுத்த அரசாங்கம் பல வழி களில் முயன்று வரு கிறது. சிலாங்கூர், பாங்கியிலுள்ள புணர் வாழ்வு மற்றும் தொழி துறை பயிற்சி மையம் இதற்கு ஓர் உதாரண மாகும். அங்கவீனர்கள் எங்கிருக் கி றா ர் க ள் என்ற விவரம் தெரி யாது போனால், இது போன்ற மையங்கள் காலியாக இருப்பதோடு பொது சொத்தை வீணடித்த செயலாகவும் கருதப்படும் என்றார் அவர்.

நற்பேறு குறைந்த வர்கள் இவ்வியக்கத்தில் தங்கள் பெயர்களை பதிந்து கொள்வதற்கு சமூக சேவை இலாகாக் கள், சமூகத் தலைவர் கள், தொண்டூழிய இயக்கங்கள் மற்றும் கிராம பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு மன்றங்கள் ஊக்கு விப்புகள் வழங்க வேண்டும். அவர்கள் தானாக வருவார்கள் வந்து தங்கள் பெயர் களை பதிந்து கொள் வார்கள் என்று காத்துக் கொண்டிராமல் அவர் களை தேடிச் சென்று பெயர்களை பதிந்து கொண்டு வரவேண்டும் என்று அவர் குறிப்பிட் டார்.

கண் பார்வையற் றோரின் ஆரம்ப இடை நிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வியை மேம் படுத்த திட்டமிட்டுள் ளது. அவர்கள் கணினி துறையில் மேம்பாட்டை வதையும் அரசாங்கம் விரும்புகிறது. நவீன கணினி யுகத்தில் கண் பார்வை ய ற் றோ ரி ன் கல்விக்கும் அவர்களின் பிற்கால நன்மைக்கும் கணினி எத்தகு அத்தி யாவசியமானது என் பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது என அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

-பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 10 |
| ___ | Unnecessary splitting of words. | 4 |
| ⊘ | Junction features | 2 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ❘ | Unnecessary splitting of words. | 31 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ⊡ | Addition / Omission of a letter. | – |
| (ǀ) | Omission / Replacement of a word. | – |
| (I) | Unnecessary joining of words. | – |

கோலாலம்பூர், ஜூலை 23-

பள்ளி பாடப்புத்தகப் பதிப்பின் புதிய முறையின் கீழ் பாடப்புத்தகங்கள் நல்ல தரமாக இருப்பதற்கும் மிக குறைந்த விலையில் கிடைப்பதற்கும் குறித்த நேரத்தில் விநியோகிக்கப்படுவதற்கும் வகை செய்யப்பட்டு இருப்பதாக கல்வி அமைச்சர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக் நேற்று தெரிவித்தார்.

1998 ஆண்டு கல்வி ஆண்டி லி ரு ந் து அமலுக்கு வரவிருக்கும் இந்த புதிய நடைமுறை பாட நூல்கள் பதிப்பு, வெளியீடு மற்றும் விநியோகிப்பு ஆகிய வற்றை உள்ளடக் கியிருக்கும் என்று அவர் தெளிவுப்படுத்தினார்.

இந்த புதிய முறை யின் மூலம் குறித்த காலத்தில் பாட நூல் கள் தயாரிக்கப் படு வதற்கும் விநியோகிக் கப்படுவதற்கும் ஏற் படக்கூடிய கால தாமதத்தை குறைக்க முடியும் என்பதுடன் பாட நூல்களின் கையெழுத்து பிரதியை நிர்ணயிப்பது, உத்தர வாதம் அளிக்கக் கூடிய தர்க்கட்டுப் பாட்டை கவனித்தல், சரியா விநியோகிப்பை உறுதி செய்தல் மற்றும் விலை குறைப்பை கண் காணித்தல் ஆகிய வற்றுக்கு கல்வி அமைச்சு பொறுப் பேற்கும் என்று அவர் சொன்னார்.

நேற்று இங்கு தமது அமைச்சில் நடைபெற்ற செய்தியாள ர் க ள் கூட்டத்தில் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக் இதனைத் தெரிவித்தார்.

இந்த பாட நூல்கள் பதிப்பின் புதிய முறை பூமிபுத்ரா பதிப்பக நிறுவனங்களின் பங் கேற்பு இருப்பது மட்டு மின்றி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி ஆகியவற்றின் நலனுக்கு முக்கியத் துவம் அளிப்பதாக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பாட நூல்களை பதிப்பது, அவற்றுக்கு பொறுப்பேற்பது மற்றும் கட்டண முறையை நிர்ணயித்தல் ஆகிய பணிகளை பகிர்ந்து அளிப்பது- போன்ற பதிப்பக சம்பந்தப்பட்ட விவரங்களை ஆராய் வதற்கு தொழில் நுட்பக் குழு ஒன்று அமைக்கப் படும் என்றும் டத்தோஸ்ரீ நஜிப் தெரி வித்தார்.

இக்குழுவில் பாடப் புத்தக பிரிவு (பி.பி.டி), கல்வி அமைச்சு, டேவான் பகாசா டான் புஸ்தாகா (டி.பி.பி.), இக்காத்தான் பெனர்ப் பித்தான் நேஷனல் (இக்காத்தான்) மற்றும் இதர நூல் பதிப்பக சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெற்று இருப்பர் என்ற அமைச்சர் தெளிவு படுத்தினார்.

-பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 16 |
| —— | Unnecessary splitting of words. | - |
| ∅ | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 2 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 16 |
| ☐ | Wrong usage of punctuation marks. | 2 |
| ⊠ | Addition / Omission of a letter. | 1 |
| ⏀ | Omission / Replacement of a word. | |
| (I) | Unnecessary joining of words. | - |

24-7-96

கோலாலம்பூர்,
ஜூலை 24-
உலகின் மூன்றா
வது மிக உயரமான
தொலைத் தொடர்பு
கோபுரமான மெனாரா
கோலாலம்பூர் நேற்று
முதன்முதலாகப் பொது
மக்களுக்குத் திறக்கப்
பட்டபோது ஆயிரக்
கணக்கான மக்கள்
அங்குக்குழுமினர்.

இவர்களில் பெரும்
பாலோர் உள்நாட்டுச்
சுற்றுப்பயணிகள் ஆவர்.
வெளி நாட்டுச் சுற்றுப்
பயணிகளும் அதிகமாகக்
காணப்பட்டனர்.

மெனாரா கோபுரத்
தின் மொத்த உயரம்
421 மீட்டர் ஆகும்.

நேற்று காலை மணி
10.00 முதல் இரவு 10.00
வரை சுமார் இரண்டா
யிரம் பேர் மெனாரா
கோலாலம்பூர் கோபு
ரத்தைச் சுற்றிப்பார்க்க
வந்தனர்.

இதனைச் சுற்றிப்
பார்ப்பதற்கான கட்ட
ணம் பெரியவர்களுக்கு
8 வெள்ளி ஆகும்.
நான்கு வயது முதல் 12
வயது வரைக்குமான
சிறார்களுக்கான கட்ட
ணம் 3 வெள்ளி ஆகும்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 8 |
| ___ | Unnecessary splitting of words. | 1 |
| ∅ | Junction features | 1 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | - |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 2 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 7 |
| [ ] | Wrong usage of punctuation marks. | - |
| ☑ | Addition / Omission of a letter. | - |
| (\|) | Omission / Replacement of a word. | - |
| (U) | Unnecessary joining of words. | - |

அட்லாந்தா ஒலிம்பிக் போட்டிகள் துவங்கி மூன்று நாட்கள் ஆகி விட்டாலும் அவ்வப் போது மாற்றம் கண்டு வரும் போட்டி முடிவு களை (பதக்கப் பட்டி யல் நிலவரம்) உடனுக் குடன் கொடுப்பதில் விளையாட்டு ஏற்பாட் டாளர்களால் இன்னும் கொடுக்க முடியவில்லை என்பதால் தாங்கள் பெரிய பிரச்னையை எதிர்நோக்கி இருப்ப தாக அப்போட்டிசெய்தி களைசேகரித்து வரும் பத்திரிகையாளர்களின் இயக்கம் நேற்று தெரி வித்தது.

இது ஒரு மோசமான நிலைமை என்று கடந்த காலங்களில் ஒலிம்பிக் செய்திகளைசேகரித்து வந்த மூத்த பத்திரிகை யாளர்கள் கூறினர்.

பதக்கப் பட்டியலில் முடிவுகள் அறிவிக்கப் பட்டாலும் பல இடங் களிலும் நடந்து வரும் போட்டிகளின் முடிவு கள் கிடைப்பதில் பல்வேறு பிரச்னைகள் இருப்பதாகவும் அவர் கள் கூறினர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் வரையில் நடை பெற்ற போட்டிகளின் முடிவுகள் 60 சதவிதம் வரையில் மட்டுமே கிடைத்தன என்றும் 20 கோடி டாலர் செலவில் அமைக்கப்பட்டுள்ள கணினிமயம் மூலம் திருப்திகரமான சேவை எதையும் இது வரையில் வழங்கப்பட முடிய வில்லை என்றும் அவர்கள் கூறினர்.

இப்பிரச்னை தொடர் பில் போட்டி அதிகாரி கள் பல முறை பத்தி ரிகையாளர்களுடன் கூட்டம் நடத்திய போதிலும் அப்பிரச்னை இன்னும் தீர்க்கப்பட வில்லை.

இந்நிலை எப்படி ஏற் பட்டது என்பதற்கான காரணத்தை அதிகாரி களினால் விளக்க முடியவில்லை.

பல போட்டிகளின் முடிவுகள் அவை நடந்து 24 மணி நேரத்திற்கு பிறகே வெளியிடப்படு கின்றன.

ஆனால், போட்டி களின் முழு முடிவுகள் நேரடியாகபோட்டிகள் நடக்கும் இடங்களில் இருந்து தொலைக் காட்சி நிலையங்கள் மூலம் உடனுக்குடன் கிடைப்பதாக ஏற்பாட் டுக் குழு அதிகாரிகள் கூறுகின்றனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 4 |
| —— | Unnecessary splitting of words. | 2 |
| ⊘ | Junction features | - |
| ॥ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| । | Unnecessary splitting of words. | 25 |
| ☐ | Wrong usage of punctuation marks. | - |
| ☑ | Addition / Omission of a letter. | - |
| (|) | Omission / Replacement of a word. | 1 |
| [I] | Unnecessary joining of words. | – |

கோலாலம்பூர், ஜூலை 24-

அரச மலேசிய விமானப்படைக்குச் (ஆர். எம்.ஏ.எஃப்.) சொந்தமான ஹாக் ரக போர் விமானம் ஒன்று நேற்று காலையில் லாபுவானில் விபத்துக்குள்ளானது.

கடந்த ஆண்டில் வாங்கப்பட்ட பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த் ரக விமானம் விபத்துக்குள் ளா ன து இது இரண்டாவது சம்பவமாகும்.

நேற்றைய சம்பவத்தில் ஹாக் விமானம் ஓடும் பாதையைவிட்டு மேலே கிளம்பும்போது நுணுக்கமு கோளாறுகள் காரணத்தினால் சில மீட்டர் தூரம் வரையில் ஓடிக் கொண்டே இருந்தது என்று ஆர்.எம்.ஏ.எஃப். தளபதி லெப்டினன்ட் - ஜெனரல் டத்தோஸ்ரீ அப்துல் கனி அஜிஸ் நேற்று தெரிவித்தார்.

இந்நிலை ஏற்பட்ட போது அதில் இருந்த இரு விமானிகளும் தானியங்கி விசையை அழுத்தி விமானத்தில் இருந்து வெளியேறினர் என்று லாஹாட்டில் அவர் நிருபர்களிடம் கூறினார்.

முதலில் பயிற்சி விமானி வெளியேறினார் என்றும் அதைத் தொடர்ந்து காப்டன் ரோஸ்லான் ஹருண் வெளி யே றி னா ர் என்றும் அவர் தெரிவித்தார்.

விமானிகள் இன்றி ஓடிய அந்த விமானம் பின்னர் சிறு நீரோடையில் மோதி வெடித்துச் சிதறியதாக அப்துல் கனி கூறினார்.

இரு விமானிகளுக்கும் லாபுவானில் உள்ள ராணுவபொது மருத்துவம னை யி ல் சிகிச்சை அளிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் கடுமையான கா ய ங் க ளு க்குள்ளாகவில்லை.

இந்த விபத்தினால் ஒரு ஹாக் விமானத்தை ஆர்.எம்.ஏ.எஃப். இழந்தது.

கடந்த மாதத்தில் நிகழ்ந்த முதல் சம்பவத்தில், ஒரு ஹாக் விமானம் பட்டர்வொர்த்தில் உள்ள ஆர். எம். ஏ.எஃப்.பிற்கு அருகில் இருக்கும் நெல் வயலில் இறங்கியது.

அவ்விமான த் தி ன் விமானியும் துணை விமானியும் உயிர் தப்பினர்.

240 கோடி வெள்ளிச் செலவில் 10 ஹாக் 100 எஸ் மற்றும் 18 ஹாக் 200 எஸ் ரக விமானங்கள் (மொத்தம் 28) வாங்கப்பட்டன.

எனினும், உபரிப் பாகங்கள் அவ்வப்போது பழுதடைந்து வருவதன் காரணத்தினால், எதிர்பார்க்கப்பட்டது போல் அந்த விமானங்களை முழுமையாகமு பயன்படுத்தப்பட முடியவில்லை.

சுமார் 40 வகையிலான உபரிப்பாகங்கள் அவ்வப்போது பழுதடைந்து விடுகிறது. அந்தப் பாகங்களை பெறுவதற்காக ஆர். எம்.ஏ.எஃப். சில வேளைகளில் மூன்று மாதங்கள் வரையில் காத்திருக்கிறது.

நேற்று காலையில் லாபுவானில் விபத்துக்குள்ளான ஹாக் விமானம், விரங்சா 12/96 என்ற ஆகாய பயிற்சியில் ஈடுபட்டிருந்தது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 5 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | - |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | - |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| \ | Unnecessary splitting of words. | 22 |
| □ | Wrong usage of punctuation marks. | - |
| ☒ | Addition / Omission of a letter. | 2 |
| ф | Omission / Replacement of a word. | 2 |
| () | Unnecessary joining of words. | - |

கோலாலம்பூர், ஜூலை 25-
தம்முடைய சேவை தேவைப்படும்
வரை அரசாங்கத்திற்குடு தலைமை
யேற்று தொடர்ந்து வழிநடத்திச் செல்லு
தாம் தயாராக இருப்பதாக பிரதமர்
டத்தோஸ்ரீ டாக்டர் மகாதீர் முகமது
நேற்று தெரிவித்தார்.

அதே சமயம் பதவி
விலகுவதற்கான தெளி
வான அறிகுறி தென்
படும்போது அவ்வாறு
செய்வதற்கும் தாம்
தயாராக இருப்பதாக
அவர் தெளிவுபடுத்தி
னார்.

நம்மை மக்களுக்கு
எப்போது பிடிக்க
வில்லை என்று தெரிந்து
கொள்வது சிரமமான
ஒன்றுதான். ஆனால்,
இறைவனையும் எனது
அரசாங்க நண்பர்களை
யும் நான் கேட்டுக்
கொள்வது ஒன்றே
ஒன்றுதான். தெளிவான
தகவலை சொல்லி
விடுங்கள். நானும்
பதவி விலகி விடு
கிறேன் என்று பிரதமர்
குறிப்பிட்டார்.

தாம் பிரதமராக
பொறுப்பேற்று சரியாக
15 ஆண்டுகள் பூர்த்தி
யாவதையொட்டி இங்கு
நடத்தப்பட்ட நண்பகல்
விருந்து நிகழ்ச்சியில்
கலந்து கொண்டு
உரையாற்றுகை யி ல்
டாக்டர் மகாதீர் மேற்
கண்டவாறு கூறினார்.

எனினும் இதர சக
அமைச்சரவை உறுப்
பினர்களுடன் கூட்டாக
சேர்ந்து இந்த விருந்து
நிகழ்ச்சியை ஏற்பாடு
செய்தவரான துணைப்
பிரதமர் டத்தோஸ்ரீ
அன்வார் இப்ராஹிம்,
முன்னதாக டாக்டர்
மகாதீருக்கு தம்து
விசுவாசத்தையும் தமது
அரசாங்க சகாக்களின்
விசுவாசத்தையும் தெரி
வித்துக் கொண்டார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 6 |
| — | Unnecessary splitting of words. | - |
| Ø | Junction features | - |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | - |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | - |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 10 |
| ☐ | Wrong usage of punctuation marks. | 3 |
| ☒ | Addition / Omission of a letter. | - |
| ⌽ | Omission / Replacement of a word. | - |
| ⊔ | Unnecessary joining of words. | - |

ஈப்போ, ஜுலை 25-
பேராவில் பல்வேறு
குற்றச்செயல்க ளி லு ம்
மாது ஒருவர் கொலை
சம்பவம் தொடர்பாகத்
தேடப்பட்டுவந்த இரு
இளைஞர்களைப்போலீ-
சார் நேற்று சுட்டுக்
கொன்றனர்.

இப்பர ப ர ப் பா ன
சம்பவம் நேற்று காலை
9.30 மணியளவில்
ஈப்போ அருகே உள்ள
ஜாலான் கோலக்
கங்சார், தாமான் விங்
ஒன் அருகே நிகழ்ந்தது.

இச்சம் ப வ த் தி ல்
தானா ஈத்தாம்
சிம்மோர் பேராக்
எனும் முகவரியைச்
சேர்ந்த குவான் தேக்
வாய் (வயது 20), ஃபுங்
கோக் ஓங் (வயது 20)
ஆகிய இரு கொள்ளை
யர்கள் சுட்டுக் கொல்
லப்பட்டவர்கள் என்று
அடையாளம் கண்டு
கொள்ளப்ப ட் ட தா க
மாநில சி.ஐ.டி.
தலைவர் ஏ.சி.பி. அசாரி
மொக்தார் இங்குள்ள
மாநில போலீஸ்
தலைமை ய க த் தி ல்
நடைபெற்ற செய்தி
யாளர்கள் கூட்டத்தில்
கூறினார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 2 |
| —— | Unnecessary splitting of words. | 1 |
| ∅ | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 7 |
| ☐ | Wrong usage of punctuation marks. | – |
| ☒ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | 1 |
| ◫ | Unnecessary joining of words. | – |

சென்னை, ஜுலை 25-

தமிழகத்தில் இருந்து மலேசியாவுக்கு வேலை தேடி செல்வோரிடம் மோசடி நடப்பதை தடுக்க முறையான நடவடிக்கை எடுக்கப் படும் என்று மாநில அரசு அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

இவ் வி ஷ ய த் தை மத்திய அரசின் கவனத் துக்கு கொண்டு செல்ல மாநில அரசை வலி யுறுத்துவேன் என்றும் நாளை இவ்விஷயத்தை அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல தமிழக சட்ட சபையில் தனி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்போவதாக வில்லி புத்தூர் தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் தாமரைக் கனி நமது நேசன் நிருபரிடம் தெரிவித் தார்.

மலேசியா செல்லும் தமிழர்களிடம் மோசடி நடப்பதைக் கண்டித்து ஸ்ரீ சுருதி மகளிர் நலமன்றத் தலைவி டத்தின்ஸ்ரீ இந்திராணி சாமிவேலு அவர்கள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

தமிழகத்தின் தினசரி நாளிதழ்களில் வந்த இந்த செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 5 |
| — | Unnecessary splitting of words. | – |
| ∅ | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 5 |
| □ | Wrong usage of punctuation marks. | 3 |
| ⧄ | Addition / Omission of a letter. | – |
| ɸ | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

மலாக்கா, ஜூலை 25-
ஆயுதம் ஏந்திய மூன்று
கொள்ளையர்கள் இங்கு
ஜாலான் முன்சி
அப்துல்லாவில் உள்ள
லி ஹிங் நகைக்
கடையில் கொள்ளை
முயற்சியில் ஈடுபட்ட
போது ஒரு பெண்
ஊழியரின் தலையை ①
துப்பாக்கி ரவை ஒன்று
உரசிச் சென்று காயம்
ஏற்படுத்தியது.
அபாய விசையை
ஊழியர் ஒருவர் அழுத்
திய பின்னர் அக்கடை
யில் இருந்து தப்பி
ஓடும்போது மிரட்டும்
நோக்கத்தில் அக்
கொள்ளை ய ர் க ள்
மூன்று முறை சுட்டதில்
ஒரு துப்பாக்கி ரவை
அந்த 40 வயது ஊழி
யரின் தலையில் உரசிச்
சென்றது.
நேற்று காலை 10.40
மணியளவில் அக்கடை
யில் ஐந்து ஊழியர்கள்
மற்றும் ஒரு வாடிக்கை
யாளர் ஆகியோர்
இருந்தபோது, தலைக்
கவசங்களை அணிந்த
வாறு அக்கடையினுள்
நுழைந்த மூவர்,
துப்பாக்கிகளை நீட்டி
இது ஒரு கொள்ளை
என்று சீன மொழியில்
சப்தம் போட்டதாக
மாநில சிஐடி தலைவர்
ஏ.சி.பி. மோக் சியூ
ஹோங் நிருபர்களிடம்
கூறினாா.
எனினும் அக்
கொ ள் ளை ய ர் க ள்
கடையை அலசி ஆராய்
வதை முடிப்பதற்கு
முன்னர் ஊழியர்
ஒருவர் அபாய
விசையை அழுத்திய
தாகவும் அதைக் கண்ட
கொள்ளையர்கள் தப்பி
ஓடியதாகவும் அவர்
கூறினார்.
துப்பாக்கிக் குண்டி
னால் காயம் ஏற்படுத்
தப்பட்ட அந்த பெண்
ஊழியர் மயக்கம்
போட்டு விழுந்ததாக
வும் அவர் கூறினார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 1 |
| — | Unnecessary splitting of words. | 4 |
| ∅ | Junction features | - |
| )\| | Illogical / Incomplete sentence construction. | - |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | - |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 13 |
| □ | Wrong usage of punctuation marks. | 2 |
| ☑ | Addition / Omission of a letter. | - |
| ɸ | Omission / Replacement of a word. | - |
| ⊓⊓ | Unnecessary joining of words. | - |

தமிழ் நாடக ரசிகர் களின் அமோக ஆதரவைப் பெற்ற திருப்புமுனை மீண்டும் தலைநகரில் அரங்கேற உள்ளது.

அடுத்த மாதம் 3, 4 ஆகிய தேதிகளில் தலைநகர் டத்தோ சோமா அரங்கில் இந்த நாடகம் மீண்டும் அரங்கேறுகிறது.

ஹைபிஸ்கஸின் நான் காவது நாடகமான இதை சிராஜுதீன் இயக்கியிருக் கி றா ர். பார்த் த வ ர் க ள் பாராட்டி - பார்க்காத வர்கள் பார்க்கத் துடித்த திருப்புமுனை நாடகம் ரசிகர்களின் வேண்டு கோளுக் கிணங்க மீண்டும் அரங் கேறுகிறது.

பச்சைத் தண்ணீர் என்றால் என்ன? கித்தா என்ற மலாய் வார்த்தைக்கு தமிழில் என்ன அர்த்தம்? கோழியில் இருந்து முட்டை வந்ததா, முட்டையில் இருந்து கோழி வந்ததா போன்ற கேள்விகளுக்கு இந்த நாடகம் நகைச்சுவை யாகப்பதில் அளிக்கிறது.

அண்மையில் வெளி வந்த மாராஸ் வீடியோ விஷன் பொழுது போக்கு கேசட் ஒன்று வா ங் கு வோ ரு க் கு 4.8.1996ஆம் தேதி நடைபெறவி ரு க் கு ம் திருப்புமுனை நாடகத் திற்கான நுழைவுக்கார்டு ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

ஜோகூரில்

இதே நாடகம் இம் மாதம் 29ஆம் தேதி ஜோ கூ ர் பா ரு டைமண்ட் ஜுபிலி அரங்கில் நடைபெற விருக்கிறது.

ஜோகூர், சிங்கப் பூரை சேர்ந்த பல ரசிகர்களின் அன்பு வேண்டுகோளுக் கா க இந்த நாடகம் ஜோகூரில் நடத்தப் படுகிறது. இந்த நல்ல வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு ரசிகர்களை நாடக இயக்குநர் திரு. சிராஜுதீன் கேட்டுக் கொள்கிறார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 5 |
| —— | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 13 |
| ☐ | Wrong usage of punctuation marks. | 2 |
| ⧄ | Addition / Omission of a letter. | – |
| ⏀ | Omission / Replacement of a word. | – |
| [ ] | Unnecessary joining of words. | – |

கம்பார், ஜூலை 27-
தெனாகா நேஷனல்
பெர்ஹாட் நிறுவனத்
திற்கு (டி.என்.பி.)
சொந்தமான ஏழு
லட்சம் வெள்ளி பெறு
மானமுள்ள மின்
இணைப்பு கம்பிகள்
(கேபள்கள்) பேரா
ஊழல் ஒழிப்பு நிறு
வனத்தின் அதிகாரிகள்
கைப்பற்றியுள்ளனர்.

34 சுருள் அடங்கிய
அந்த கம்பிகள் கம்பார்
மற்றும் கோ ப் பெ ங்
பகுதிகளில் கண்டு
பிடித்ததாக அதிகாரி
ஒருவர் தெரிவித்தார்.

டி.என்.பி.க்கு சொந்த
மான அந்த சுருள்கள்
கும்பல் ஒன்றினால் ஒரு
தரப்பினருக்கு மிக
குறைந்த விலையில்
விற்றிருக்கலாம் என்று
நம்பப்படுகிறது.

நேற்று முன்தினம்
கம்பார் மற்றும் கோப்
பெங்கில் மேற்கொண்ட
திடீர் சோதனையின்
மூலம் க ம் பா ரு க் கு
அருகிலுள்ள தாமான்
செஜாதெரவில் 14
சுருள் கம்பிகளும்
தெமோ எனும் இடத்
தின் அருகிலுள்ள கம்
பார்-தாப்பா சாலையில்
மேலும் 17 சுருள் கம்பி
களை லஞ்ச ஒழிப்பு
அதிகாரிகள் மீட்டுள்ள
னர்.

கம்போங் கெப்பா
யாங் கோப்பெங்
அருகே மேற்கொண்ட
மற்றொரு சோதனை
யில் மேலும் மூன்று
சுருள் கம்பிகள் கைப்
பற்றப்பட்டது.

இப்பொரு க ளை
மீட்க டி.என்.பி.யின்
அமலாக்க பிரிவினரும்
உடன் சென்றனர்
என்பது குறிப்பிடத்தக்
கது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | 7 |
| (ı) | Junctional features. | – |
| —— | Unnecessary splitting of words. | 1 |
| (/) | Junction features | 1 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | |
| | **Performance errors** | 10 |
| ı | Unnecessary splitting of words. | – |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| [/] | Addition / Omission of a letter. | 2 |
| ɸ | Omission / Replacement of a word. | – |
| [][] | Unnecessary joining of words. | |

கோத்தாபாரு,
ஜூலை 27-
மாநில கட்சித்
தலைமைத்துவம் மீது
நம்பிக்கை இல்லாத
காரணத்தால் கிளந்
தான் மாநில கெராக்
கான் கட்சி உறுப்பினர்
கள் கட்சியை விட்டு
விலகுவதாக கூறப்படும்
குற்றச்சாட்டை அக்
கட்சியின் தேசியத் தலை
வர் டத்தோஸ்ரீ டாக்டர்
லிம் கெங் எய்க் நேற்று
மறுத்தார்.

அம்மாதிரியான குற்
றச்சாட்டு ஏமாற்றம்
அடைந்த தனிப்பட்ட
நபர்களினால் கிளப்
பப்பட்டு வருவதாகவும்
எந்தவொரு சூழ்நிலை
யிலும் கூட்டம் கூட்ட
மாக கட்சியில் இருந்து
உறுப்பினர்கள் வெளி
யேறியது கிடையாது
எனவும் அவர் சொன்
னார்.

மேற்கண்ட செய்கை
யான்து வே ண் டு
மென்றே கிளந்தான்
மாநில கெராக்கான்
கட்சியில் பிரச்னையை
உருவாக்க வேண்டும்
என்ற நோக்கத்தில்
மேற்கொள்ள ப் ப டு வ
தாக மாநில கெராக்
கான் கட்சியின் 15ஆம்
ஆண்டு பேராளர்
மாநாட்டை தொடக்கி
வைத்த பின்னர் செய்தி
யாளர்களிடம் அவர்
மேற்கண்டவாறு கூறி
னார்.

நேற்று முன்தினம்
வெளிவந்த பத்திரிகை
செய்தி ஒன்றில் சுமார்
3,000 கெ ரா க் கான்
கட்சி உறுப்பினர்கள்
மாநில தலைவர் இங்
சியாங் சின் மீது நம்
பிக்கை இழந்த கார
ணத்தால் கட்சியை
விட்டு விலக விருப்ப
தாக மாநில இளைஞர்
பிரிவு தலைவர் பூ ஜிட்
சிட் தெரிவித்து இருந்
தார்.

மாநிலத்தின் முன்
னாள் தலைமைத்து
வத்தை சார்ந்த நபர்
ஒருவரின் கையாளாக
இருக்கும் மன நிறைவு
கொள்ளாத காரணத்
தால் இது போன்ற
நடவடிக்கையில் ஈடு
படுவதாகவும் எதிர்க்
கட்சிகளுடன் சேர்ந்து
கீழறுப்பு வேலையில்
ஈடுபட்ட காரணத்திற்
காக அவர்கள் கட்சியில்
இருந்து நீக்கப்பட்டவர்
கள் என்றும் மூலத்
தொழில் துறை அமைச்
சருமான டத்தோஸ்ரீ
டாக்டர் லிம் கெங்
எய்க் தெரிவித்தார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 6 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 1 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ▭ | Using the wrong English / Malay translation. | — |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 25 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☒ | Addition / Omission of a letter. | — |
| ф | Omission / Replacement of a word. | — |
| [\|] | Unnecessary joining of words. | 1 |

லங்காவி; ஜூலை 27-
தங்கள் பயணத்தின்
போது, கைத்தொலை
பேசியை பயன்படுத்து
வதற்கு வாகனமோட்டி
களுக்கு தடைவிதிக்கும்
உத்தரவு அமல்படுத்
தப்படுவதற்கு இன்னும்
17 நாட்களே எஞ்சி
யிருக்கின்றன என்று
போக்குவரத்து துறை
அமைச்சர் டத்தோஸ்ரீ
லிங் லியோங் சிக் நேற்று
நினைவுறுத்தியுள்ளார்.

வரும் ஆகஸ்ட் 12ஆம்
தேதி முதல் இந்த
உத்தரவு அதிகாரப்
பூர்வமாக நடப்புக்கு
வருகிறது. அத்தேதிக்கு
பிறகு வாகன பயணத்
தின்போது வாகன
மோட்டிகள் கைத்
தொலைபேசி பயன்
படுத்தப்படுவது கண்டு
பிடிக்கப்பட்டால் சம்பந்
தப்பட்ட பொறுப்பதி
காரிகளால் தடுத்து
நிறுத்தப்ப டு வ து ட ன்
சட்ட நடவடிக்கைக்கு
ஆளாக நேரிடும் என்று
அமைச்சர் தெளிவு
படுத்தினார்.

சம்பந்தப்பட்ட தேதி
முதல் போலீசார்
மற்றும் சாலை போக்கு
வரத்து இலாகாவின்
அமலாக்க அதிகாரிகள்
கைத் தொலைபேசியை
பயன்படுத்தும் வாகன
மோட்டிகளை கண்
காணித்து வருவர்
என்று நேற்று இங்கு
அனைத்துலக மாநாடு
ஒன்றை தொடக்கி
வைத்த பின்னர்
செய்தியாளர்க ளி ட ம்
பேசுகையில் அவர்
இதனைத் தெரிவித்
தார்.

இந்த புதிய உத்தரவு
அமலாக்கத் தி னா ல்
கைத் தொலைபேசி
உரிமையா ள ர் க ள்
எவ்வித சிரமத்திற்கும்
ஆளாக வேண்டியிராது
என்று லிங் தெளிவு
படுத்தினார்.

காரணம், அவர்கள்
கைத்தொலைபேசியை
பயன்படுத்துவ த ற் கு
த டை வி தி க் க ப்
பட்டபோதிலும் வாக
னத்தில் பொருத்தப்
பட்டு கையில்
எடுக்காமலேயே பேசக்
கூடிய தொலைபேசியை
பயணத்தின் போ து,
பயன்படுத்த அனுமதிக்
கப்படுவர் என்று
டத்தோஸ்ரீ லிங் தெளி
வு படுத்தினார்.

ஆகஸ்ட் 12 முதல்
கையில் எடுக்காம
லேயே வாகனத்தி
லேயே பொருத்தப்
படக்கூடிய தொலை
பேசியை மட்டுமே
வாகனமோ ட் டி க ள்
பயன்படுத்த வேண்டும்
என்று அவர் சொன்
னார்.

கடந்த ஓரிரண்டு
ஆண்டுகளுக்கு முன்பு
விற்கப்பட்ட விலை
யோடு ஒப்பிடுகையில்
இவ்வகை தொலைபேசி
விலை குறைவாக
சந்தையில் கிடைக்கும்.

வாகனத்தில் பொருத்
தப்படாத தொலை
பேசியை பயன்படுத்த
வேண்டு மா னா ல்,
சாலையோரத்தில் வாக
னத்தை நிறுத்திவிட்டு
பயன்படுத்தலாம் என்று
அவர் ஆலோசனை
கூறினார்.

கெந்திங் மலை பஸ்
விபத்து குறித்து குறிப்
பிடுகையில் அச்சம்பவம்
தொடர்பான முழு
அறிக்கையை தாம்
இன்னும் பெறவில்லை
என்றார் லிங்.

-பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (i) | Junctional features. | 16 |
| — | Unnecessary splitting of words. | – |
| ∅ | Junction features | 3 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ▭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ׀ | Unnecessary splitting of words. | 29 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊠ | Addition / Omission of a letter. | – |
| ɸ | Omission / Replacement of a word. | – |
| ⊡ | Unnecessary joining of words. | – |

பெட்டாலிங் ஜெயா, ஜூலை 30-

நாடு முழுவதிலும் உள்ள பெட்ரோல் நிலையங்களில் புகை பிடிப்பதற்கு தடை மற்றும் கிள்ளான் பள்ளத்தாக்கில் சொந்த மாகவே எண்ணெய் நிரப்பும் முறை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து அம லாகும் என உள்நாட்டு வர்த்தக மற்றும் பய னீட்டாளர் விவகார அமைச்சர் டத்தோ அபு ஹசான் ஓமார் கூறி னார்.

தொடக்க கட்ட மாக உணவு சட்டத் தின் கீழ் புகைபிடிப் பதற்கு தடை விதிக் கப்படும் எனினும் நீண்ட கால அடிப்படை யில் பெட்ரோலிய மேம்பாட்டு சட்ட விதியின் கீழ் புகை பிடிப்பதற்கான தடை அமல்படுத்தப்படும் என டத்தோ அபு ஹசான் ஓமார் கூறினார்.

சொந்தமாக வாக னத்தில் எண்ணெயை நிரப்பிக்கொ ள் ளு ம் முறைக்கு அனைத்து தரப்பினரிடமும் நல்ல வரவேற்பு கிடைத் துள்ளதாக அபு ஹசான் சொன்னார்.

இந்த புதிய முறை வெற்றியடைவ த ற் கு பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள் பல் வேறு வசதிகளை அறி முகப்படுத்தி யு ள் ள தாகவும் அவர் சொன் னார்.

இந்த விதிமுறையை அமல்படுத்துவ த ற் கு இரண்டு மாதங்களுக்கு முன் பெரிய அளவில் பிரசாரம் மேற்கொள் ளப்படும் என அவர் சொன்னார்.

இந்த புதிய முறையின் படி பெட்ரோல் நிலைய உரிமையா ள ர் க ள் வெளிநாட்டு தொழி லா ள ர் க ளை வேலைக்கு எடுப்பதற்கு அனுமதிக்கப்ப ட மாட் டார்கள் என்பதுடன் பயனீட்டா ள ர் க ள் எண்ணெய் ஊற்ற வதற்கு உதவியாளர் களின் சேவையை பெற விரும்பினால் ஒவ் வொரு முறையும் எண்ணெய் ஊற்றும் போது சேவைக் கட்டணமாக 50 காசு வசூலிக் கப்படும் என்று அமைச்சர் தெரிவித் தார்.

பெ ட் ரோ லி ய பொ ரு க ளி ன் விற்பனை குறித்து குறிப் பிடுகையில் காரீயமற்ற பெட்ரோல் பொரு களின் பயனீடு கடந்த ஆண்டு 69 விழுக்காடு அதிகரித்து இருக்கிறது என்றார் அவர்.

அதே வேளையில் டீசல் அதற்கு முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகை யில் 6 விழுக்காடு அதிகரித்துள்ளது.

கியாஸ் (எல்.பி.ஜி.) கடந்த ஆண்டு சற்று அதிகரித்து 940,685 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்று அமைச்சர் தெரிவித் தார்.

-பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 10 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 2 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 2 |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 31 |
| □ | Wrong usage of punctuation marks. | - |
| ☒ | Addition / Omission of a letter. | - |
| ф | Omission / Replacement of a word. | - |
| ◫ | Unnecessary joining of words. | - |

கோலாலம்பூர்,
ஜூலை 31-
தரம் மற்றும் கவர்ச்சி
யான மதிப்புடைய
உற்பத்திப் பொருட்கள்
மற்றும் சேவையை
அறிமுகப்படுத்துவ தி ல்
அனைவரும் குறிப்பாக
மலேசிய தொழில்
துறைகள் முனைப்பு
காட்ட வேண்டும்
என்று பொதுப்பணி
அமைச்சர் டத்தோஸ்ரீ
டாக்டர் சாமிவேலு
நேற்று தெரிவித்தார்.
இதர நாடுகளினால்
வழங்கப் ப டு வ தை க்
காட்டிலும் நல்ல தர
மான உற்பத்திப்
பொருட் க ளை யு ம்
சேவை க ளை யு ம்
வழங்குவதை உறுதிப்
படுத்துவ த ற் கா ன
முயற்சிகள் எடுக்கப்பட
வேண்டும் என்றும்
அவர் தெரிவித்தார்.
நாம் தயாரிக்கும்
பொருட்கள் மற்றும்
சேவை அனைத்துலக
சமூகத்தினால் நிரா
கரிக்கப்படுவத ற் கா ன
வழிகளை நாம் ஏற்
படுத்திவிடக் கூடாது
என்று மலேசிய
தொழில் திறன் போட்
டிக்கான புதிய சின்
னத்தை வெளியீடு
செய்யும்போது மஇகா
தேசியத் தலைவருமான
டத்தோஸ்ரீ சாமிவேலு
தெரிவித்தார்.

அதிக எண்ணிக்கை
யில் பொருட்களை
தயாரிப்பதைக் காட்டி
லும் குறைவாக இருந்
தாலும் மனதைக்
கவரும் வகையில்
கவர்ச்சியாக அவை
இருக்க வேண்டும்
என்றார் அவர்.
இவ்வாண்டின் இறு
திப் போட்டி ஆகஸ்ட்
8ஆம் தேதி துவங்கி
ஐந்து நாட்களுக்கு
கோலாலம்பூர் தொழில்
நுட்ப ஆசிரியர் கல்
லூரியில் நடைபெறும்
என்று அவர் கூறினார்.

இவ்வாண்டு வெற்றி
யாளர்கள், அடுத்த
ஆண்டில் சுவிட்சர்
லாந்து செய்ண்ட்
கேலனில் நடைபெறும்
34ஆவது அனைத்துலக
இளைஞர் திறன் ஒலிம்
பிக் மற்றும் 1998இல்
பேங்காக்கில் நடை
பெறவுள்ள 3ஆவது ஆசி
யான் தொழில்திறன்
போட்டியிலும் மலே
சியாவை பிரதிநிதித்து
கலந்து கொள்ள
விருப்போரின் தேர்வுக்
காக பரிசீலிக்கப்படுவர்
என்றார் அவர்.
இப்புதிய சின்னத்தை
வரைந்த மலேசிய
தகவல் இலாகாவைச்
சேர்ந்த அப்துல் ரஷிட்
அமாட்டிற்கு 1,500
வெள்ளி பரிசாக
வழங்கப்பட்டது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 4 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 5 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ▭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 22 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☑ | Addition / Omission of a letter. | – |
| ⟨\|⟩ | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

தைப்பே, ஆக. 1-
தைவானில் வீசிய
புயலினால் இருவர்
காண ம ல் போ ன
தோடு முப்பதாயிரம்
வீடுகளுக்கான மின்சார
வினியோகம் துண்டிக்
கப்பட்டது.

புயலினால் உள்
நாட்டு விமான நிலை
யங்களும் துறைமுகங்
களும் மூடப்பட்டன.

அனைத்து நிதிச்
சந்தைகள் மற்றும் அதி
காரப்பூர்வ நிறுவனங்
கள் மூடப்படும் என
அரசாங்கம் அறிவித்
ததை தொடர்ந்து
மக்கள் உணவுப்
பொருகளை வாங்கு
வதற்காக கடைகளுக்கு
விரைந்தனர்.

கடற்கரையில் விளை
யாடிக் கொண்டிருந்த
ஏழு வயது பள்ளி
மாணவன் கடலில்
அடித்து செல்லப்பட்ட
தாக புயல் நிவாரண
மையம் வெளியிட்ட
அறிக்கையில் கூறியது.
கட்லுக்கு சென்ற 63
வயது மீனவர்
திரும்பவே இல்லை
யென்றும் இவர் மூழ்கி
யிருக்கக்கூடும் என
அஞ்சப்படுகிறது.

புயலினால் ஏற்பட்ட
கடல் கொந்தளிப்
பினால் அந்த இருவரை
யும் தேட முடிய
வில்லை என மீட்புக்
குழுவின் அதிகாரிகள்
கூறினர்.

தைவான் முழுவதும்
புயல் வீசக்கூடும் என
எச்சரிக்கப்பட்டுள்ளது.

உள்நாட் விமான
நிலையங்கள் அனைத்
தும் மூடப்பட்டது.

எனினும் தைப்பே
அனைத்துலக விமான
நிலையம் தொடர்ந்து
செயல்பட்டு வருகிறது.

துறை மு க ங் க ளி ல்
வேலை தடைப்பட்டுள்
ளன. நாடு முழுவதிலும்
புயலினால் பாதிக்கப்
பட்ட மக்களுக்கு உத
வும் பொருட்டு
நிவாரண மையங்கள்
அமைக்கப்ப ட் டு ள் ள
தாக அரசாங்கம் அறி
வித்துள்ளது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 4 |
| — | Unnecessary splitting of words. | - |
| ⊘ | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 23 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊡ | Addition / Omission of a letter. | 3 |
| ɸ | Omission / Replacement of a word. | 2 |
| ◫ | Unnecessary joining of words. | – |

(சுந்தரபாண்டியன்-பரம்)

புருவாஸ், ஆக. 3- சுமார் 15 லட்சம் வெள்ளி செலவில் கட்டி முடிக்கப் ப ட் ட புருவாஸ் தமிழ்ப்பள்ளியில் 20 கணினி கொண்ட மையம் ஒன்று அமைக்கப்படும் என்று புருவாஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் லிம் கெங் எய்க் கூறினார்.

இங்கு இத்திட்டம் உருவாக ம.இ.கா. தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ ச. சாமிவேலு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளார் என்று மூலத்தொழில் அமைச்சருமான அவர் சொன்னார்.

இத்திட்டத்தின் வழி இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் மட்டும் அல்ல மற்ற மாணவர்களும் இக்கணினியை கற்று எதிர்கால கல்வியில் எதிர்நோக்கும் சவால்களை சமாளிக்க உதவும் என்று அவர் சொன்னார்.

ஆறாவது மலேசியத் திட்டத்தில் உலக வங்கி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட இப் ப ள் ளி யி னை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் லிம் வியாழக்கிழமை அதிகாரப்பூர்வமாக திறந்துவைத்தார்.

இந்நிக ழ் ச் சி யி ல் பேசிய அவர், இங்கு இப்பள்ளி கட்டப்படுமா என்று கேள்வி எழுந்தது. இத்திட்டம் சிறப்பாக நிறைவேற ம.இ.கா. தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ ச. சாமிவேலு மற்றும் ம.இ.கா. கிளைகள் பொது அமைப்புகள் கொடுத்த முழுமையான ஆதரவினால் முற்றுபெற்றதாக தெரிவித்தார்.

சுமார் 15 லட்சம் வெள்ளி செலவில் கட்டப்பட்டு இருக்கும் இப்புதிய பள்ளி, புருவாஸ் தமிழ்ப்பள்ளி, சுங்கை புருவாஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி மற்றும் சங்காட் புருவாஸ் தோட்டதமிழ்ப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டுப்பள்ளியாக மாற்றப் பட்டுள்ளது என்று கெராக்கான் கட்சியின் தேசியத் தலைவரும் புருவாஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் லிம் தெரிவித்தார்.

எதிர்கால சவால்களை சமாளிக்க இப்பொழுது இருந்தே மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களின் கல்விக்கு தேவையான உந்துதலை ஏற்படுத்த வேண்டும்.

பள்ளியை சிறப்பாக கட்டி முடித்துவிட்டோம் என்றிருக்காமல் மாணவர்கள் கல்வியில் சிறந்தவர்களாக இருக்க ஆசிரியர்களும் முழு கவனத்தை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் சுமார் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதில் பேசிய பள்ளியின் தலைமையாசிரியர் திரு. ம. காளியப்பன் இங்கு சிறப்பான முறையில் கட்டப்பட்ட பள்ளி மேம் பா ட் டு க் கு உழைத்த அனைவருக்கும் நன்றியினை கூறிக் கொண்டார்.

- பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (i) | Junctional features. | 16 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ∅ | Junction features | 1 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ▭ | Using the wrong English / Malay translation. | 2 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 29 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☒ | Addition / Omission of a letter. | 2 |
| ф | Omission / Replacement of a word. | - |
| [][] | Unnecessary joining of words. | 1 |

மலேசிய

நண்பன்

மக்கள் ஏடு HARIAN TAMIL MALAYSIA NANBAN

குடும்பத்தில் கணவன் - மனைவி தகராறு இல்லாமல் நேசத்தோடு இருக்க சில யோசனைகள்:-

* கணவர்தான் உங்களுக்கு உலகின் முக்கிய உறவுக்காரர். எனவே அவருக்காக நீங்கள் எதையும் விட்டுக்கொடுப்பதில் தவறே இல்லை என்ற மனப்பக்குவத்தை முதலில் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

* கணவருக்கு எது பிடிக்கும். பிடிக்காது என்பதை விரல் நுனியில் வைத்திருங்கள்.

* கணவர் ஏதாவது கஷ்டமான நிலையில் இருக்கும்போது அவருக்கு நீங்கள் ஆறுதல் சொல்ல வேண்டும். தன்னம்பிக்கையை ஊட்டுகிற மாதிரி அது இருக்க வேண்டும்.

* கணவரிடம் மாதச் சம்பளத்தை வாங்கி வைத்துக்கொண்டு வீட்டு நிர்வாகத்தை நீங்களே கவனியுங்கள். அவர் செலவுக்கும் கொடுங்கள் இதுவே நல்லது.

* வேலை முடிந்து வீடு திரும்பும் கணவரிடம் உடனே பிரச்னைகளை சொல்லாதீர்கள். சந் தோச சமாச்சாரமாக இருந்தால் உடனே சொல்லலாம். மற்ற விஷயங்களை ஆற அமர சொல்லுங்கள்.

* கணவன் கோபப்படும்போது பதிலுக்கு நீங்களும் கோபப்படாதீர்கள். உங்கள் பக்கம் நியாயம் இருந்தால்கூட அமைதியாக இருந்து விட்டு அவர் கோபம் தணிந்த பிறகு அதைச் சொல்லுங்கள். அப்போது தான் அவர் விஷயத்தை உணருவார். இதுவே நாளடைவில் அவர் கோபத்தைத் தணித்துவிடும்.

வாய்க்கு ருசியாக உங்களுக்கு சமைக்கத் தெரியாவிட்டாலும் கூட வித விதமான மாறுபட்ட சமையலைச் செய்யுங்கள். அவருக்குச் சலிப்பு ஏற்படாத வண்ணம்.

* உங்கள் ஆசைகள் எதுவாக இருந்தாலும் கணவர் ஜாலியாக இருக்கும்போது சொல்லப் பழகுங்கள்.

* கணவரிடத்தில் குதர்க்கமாகவோ, மறைமுகமாகவோ பேசாதீர்கள். இது நாளடைவில் விரிசலில் கொண்டுபோய் விடும்.

* கணவரை அடிக்கடி புகழ்ந்து பேசுங்கள். அதற்காகக் காரியம் இல்லாமல் புகழாதீர்கள். நீங்கள் புகழப்புகழ அவருக்கு உங்களை அதிகம் பிடிக்கும்.

* கணவர் வேலை முடிந்து திரும்பும்போது அவர் கண்ணுக்கு அழகாகக் காட்சி தரும் வகையில் இருங்கள்.

* வளவள பேச்சுதான் எப்போதுமே தகராறில் போய் முடியும். எனவே நீங்கள் பேச்சைக் குறைக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

* இவை எல்லாவற்றுக்கும் பிறகு கணவர் உங்களிடம் அன்போடு இருக்கிறாரா? என்பதைத் தெரிந்து கொள்ள நீங்கள் சற்று நடிக்கத் தெரிந்திருக்கவேண்டும். ஒரே ஒரு நடிப்புதான். தனிமையில் இருக்கும் போது ஆ.... கால் வலிக்கிறதே! இடுப்பு வலிக்கிறதே! என்று சொல்லுங்கள். அவர் பிடித்து விடட்டுமா? என்று கேட்டால் ஓ.கே. அப்படி இல்லாமல் மருந்து மாத்திரை வாங்கி வரட்டுமா? அல்லது இப்ப என்ன செய்யணுங்கிறே! என்று கேட்டால் ம்ஹூம் ஓ.கே. இல்லை என்று பொருள்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 10 |
| — | Unnecessary splitting of words. | 3 |
| ⊘ | Junction features | - |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ▭ | Using the wrong English / Malay translation. | 2 |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 19 |
| □ | Wrong usage of punctuation marks. | 10 |
| ⊠ | Addition / Omission of a letter. | 1 |
| ф | Omission / Replacement of a word. | 1 |
| ◫ | Unnecessary joining of words. | 1 |

கோலாலம்பூர், ஜூலை 23-
உலகின் மூன்றாவது உயரமான
கோபுரம் என்று வர்ணிக்கப்படும்
"மெனாரா கோலாலம்பூர்" முதன்
முறையாக இன்று பொது மக்க
ளுக்குத் திறந்து விடப்படுகி
நகரின் மையக் காட்சிகளில்
ஒன்றாகவும் நகர கட்டிட அமைப்
பின் வடிவமைப்பில் ஈர்ப்பு நிறைந்த
தாக, விளங்கும், புக்கிட் நானாஸ்
மலைப்பகுதியில் அமைந்துள்ள 421
மீட்டர் உயரத்திலான அந்த கோபு
ரத்தில் உணவு மையங்கள், பரிசுப்
பொருள் கடைகள், சுழலும் உண
வகம் ஆகியவை இடம் பெற்றுள்
ளன.

இந்த கோபுரத்திற்கு வருகை
புரியும் மக்கள் உயரத்தில் நின்று
நகரை பார்ப்பதற்கு ஏதுவாக
மேடை ஒன்றும் அமைக்கப்பட்டுள்
ளது என்று இந்த கோபுரத்தை நிர்
வகிக்கும் நிறுவனத்தின் தலைமை
நிர்வாகி முகமட் நசீர் இதின் நேற்று
கூறினார்.

நேற்று பத்திரிகையாளர்களை
அழைத்துச் சென்று இந்த கோபுரம்
முழுமையும் சுற்றிக் காண்பித்த
அவர், எதிர்வரும் 15 ஆண்டு
களுக்கு இந்த கோபுரத்தை நிர்
வகிக்கும் பொறுப்பை மெனாரா
கோலாலம்பூர் செண்டிரியான்
பெர்ஹாட் என்ற நிறுவனம் ஏற்றுக்
கொண்டிருப்பதாக சொன்னார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 7 |
| — | Unnecessary splitting of words. | 3 |
| ⊘ | Junction features | – |
| ǁ | Illogical / Incomplete sentence construction. | – |
| ▭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 9 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊠ | Addition / Omission of a letter. | 1 |
| ‹|› | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

அட்லாண்டா, ஜுலை 23-
ஒலிம்பிக் போட்டியை ஏற்று நடத்தி(ட்) கொண்டிருக்கும் அமெரிக்கா நேற்று நீச்சல் பிரிவில் இரு தங்கத்தை வென்றது. நேற்று நடைபெற்ற 400 மீட்டர் நீச்சல் பிரிவில் அமெரிக்காவின் தோம் டோலன் வெற்றி பெற்று(ட்) தங்கம் வென்றார்.

இப்போட்டியில் அமெரிக்கா வுக்குகிடைத்த முதல் தங்கம் இது வாகும். பின்னர் 4X200 மீட்டர் நீச்சல் அஞ்சல் ஓட்டத்தில் அமெரிக்கா இரண்டாவது தங் கத்தை வென்றது.

முதல் நாள் ஒலிம்பிக் போட்டி யில் எந்தவொரு தங்கத்தையும் வெல்லாத அமெரிக்கா நேற்று தனது தங்கத்தை வென்றதன் வழி இனிமேல் ஏராளமான தங்கத்தை வாரி(ப்) குவிக்கலாம் என்று தெரி கிறது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 4 |
| —— | Unnecessary splitting of words. | 1 |
| ⌀ | Junction features | – |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ▭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 5 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ⧄ | Addition / Omission of a letter. | – |
| ɸ | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

சுங்கைப்பட்டாணி, ஜூலை 23-
சனிக்கிழமையன்று போலீசார்
மேற்கொண்ட திடீர் சோதனையில்
போதைப் பொருள் வினியோகிப்ப
வர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட
நாலவரைக் கைது செய்து 779
கிராம் கஞ்சாவையும் எட்டு பேக்
கெட் எக்ஸ்டெசி மாத்திரைகளை
யும் கைப்பற்றினர்.

மொத்தம் 15 ஆயிரம் வெள்ளி
விலை மதிப்புள்ள தொலைக்காட்
சிப்பெட்டி, வீடியோ கருவி மற்றும்
மோட்டார் சைக்கிள் ஒன்றையும்
போலீசார் கைப்பற்றினர்.

ஜாலான் இண்டா 5, தாமான்
செஜாத்தி இண்டா என்ற இடத்தி
லுள்ள வீட்டில் பிற்பகல் 2.30
மணிக்கு திடீர் சோதனை செய்த
தாக போலீஸ் குழுவினருக்குத்
தலைமையேற்ற கோலமூடா
மாவட்ட போதைப்பொருள் ஒழிப்
புப் பிரிவு தலைவர் உதவி சூப்
ரிண். அரிஃப் ஓமார் தெரிவித்தார்.

கட்டாய மரண தண்டனை
விதிக்க வகை செய்யும் அபாயகர
மான போதைப்பொருள் சட்டம்
39-பி பிரிவின் கீழ் கைதான
வர்கள் குற்றஞ்சாட்டப்படுவர்
என்று அவர் கூறினார்.

இருபதிலிருந்து முப்பது வயதுக்
குட்பட்ட சந்தேக நபர்களை
இரண்டு வாரங்களுக்குத் தடுத்து
வைக்க மாஜிஸ்திரேட் நீதிமன்றத்
திடமிருந்து போலீசார் அனுமதி
யைப் பெற்றனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (i) | Junctional features. | 3 |
| — | Unnecessary splitting of words. | 3 |
| ⊘ | Junction features | – |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 12 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ☒ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | – |
| ⊔ | Unnecessary joining of words. | – |

கோத்தா கினபாலு, ஜூலை 24- அரச மலேசிய விமானப் படைக்குச் சொந்தமான ஹார்வ்க் ர்க விமானமொன்று லாபுவான் விமான நிலையத்தருகே நேற்று காலை விழுந்து வெடித்துச் சிதறியது.

லாபுவான் போலீஸ் நடவடிக்கை அறைக்குக் கிடைத்த ஆரம்ப தகவலின்படி விமானியும் உதவி விமானியும் உயிர் பிழைத்து விட்டனர்.

காலை 8.05 மணிக்கு இந்த விமான விபத்து பற்றிய தகவல் கிடைத்ததாகப் போலீஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த இடத்திற்குப் போலீசார் விரைந்தனர். அதே வேளையில் விபத்துக்கான காரணத்தை அறிய விமானப்படைப் புலனாய்வை மேற்கொண்டது.

லாபுவானில் விமானப் படையின் ஹாரவ்க் ரக விமானம் விழுந்து வெடித்துச் சிதறியது. இது இரண்டாவது சம்பவமாகும். இந்த ரக விமானம் கடந்த ஆண்டு பிரிட்டிஷ் ஏரோஸ் பேஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டவையாகும்.

மொத்தம் 28 ஹாரவ்க் ரக விமானங்கள் 200 கோடியே 40 லட்சம் வெள்ளிக்கு வாங்கப்பட்டன. 100 ரகத்தைச் சேர்ந்த 10 ஹாரவ்க் ரக விமானங்களும் 200 ரக விமானங்கள் 18ம் வாங்கப்பட்டன.

எனினும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. ஏனெனில் அதன் பாகங்கள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன என்றார் அவர்.

இதனிடையே, அரச மலேசிய விமானப் படையின் தலைவர் லெப்டினண்ட் ஜெனரல் டத்தோஸ்ரீ அப்துல் அஜிஸ் கனி இந்த விபத்து குறித்து விளக்கமளித்தார்.

விமானம் ஓடு பாதையிலிருந்து சில மீட்டர் தூரம் உயரே பறந்ததும் அதில் ஏதோ தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் இரண்டு விமானிகளும் வெளியே குதித்து தப்பினர். துணை விமானி முதலில் குதித்தார். அதன் பின் விமானி கேப்டன் ரொஸ்லான் குதித்தார். ஹருண் பயிற்சிக்காக ஏற்றிச் சென்ற அந்த விமானம் சிறிய பள்ளத்தாக்கு ஒன்றில் விழுந்து வெடித்தது என்றார் அவர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 3 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ∅ | Junction features | – |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | — |
| | **Performance errors** | |
| ! | Unnecessary splitting of words. | 11 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊘ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

ஈப்போ, ஜூலை 25-

கொள்ளைச் சம்பவம் ஒன்றில் குடும்பமாது ஒருவரை கொலை செய்ததற்காக தேடப்பட்டு வந்த ஆசாமிகள் இருவரை போலீசார் சுட்டு வீழ்த்தினர்.

நேற்று காலை 9.30 மணியளவில் TRS 250 ரக ACG 9968 எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் ஈப்போ கோலக்கங்சார் நெடுஞ் சாலையின் வெங் ஒன் குடியிருப்பு பகுதிக்கு அருகே தலைமை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஷாபி தலைமையில் சென்ற போலீஸ் குழு இவர்களை சுட்டு வீழ்த்தியது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவுத் தலைவர் ஏசிபி அசாரி மொக்தார் கூறினார்.

சந்தேகத்திற்கு இடமாக அவர்கள் இருவரின் செயல் இருந்ததை தொடர்ந்து போலீசார் பின் தொடர்ந்து வருவதை உணர்ந்து தப்பி ஓட முயற்சித்த வேளை யில் போலீசாரை நோக்கி இரண்டு முறை சுட்டனர்.

இவர்களை போலீஸ் குழு விரட்டிச் சென்று சுட்டதில் ஒருவர் ஸ்தலத்திலேயும் மற்றொருவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்று அவர் கூறினார்.

போலீசாரால் சுட்டுக் கொல்லப் பட்டவர்கள் இருவரும் ஈப்போ தானாஹீத்தாம் பகுதியைச் சேர்ந்தவர்கள். குவாங் தெக் வாய் (வயது 20), இவரது சகா பூங் கோப் வெங் (வயது 20) என்றும் அடையாளம் கூறப்பட்டது.

கடந்த பிப்ரவரி 16ம் தேதி ஈப்போவில் நிகழ்ந்த கொள்ளைச் சம்பவம் ஒன்றில் குடும்ப மாது ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், இவர்கள் இருவரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று தெரியவந்தது. போலீசார் விரித்த வலையில் இருந்து தப்பிக்க முயன்ற வேளையில் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட போது இவர்கள் பயன் படுத்திய "சிமித் வெல்சன்" ரக கைத்துப் பாக்கி, ஒரு கத்தி மற்றும் இரண்டு முகமூடி துணிகள், ஒரு பை ஆகிய வற்றை போலீசார் கைப்பற்றினர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (1) [circled 1] | Junctional features. | 10 |
| — [line] | Unnecessary splitting of words. | 2 |
| ⊘ [circled slash] | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⊂⊃ [loop] | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ! [short mark] | Unnecessary splitting of words. | 4 |
| □ [box] | Wrong usage of punctuation marks. | – |
| ⊠ [box with slash] | Addition / Omission of a letter. | 1 |
| ф [bracket mark] | Omission / Replacement of a word. | 1 |
| ⊞ [split box] | Unnecessary joining of words. | – |

குவா மூசாங், ஜூலை 26-
நிரப்பிய பெட்ரோலுக்கான கட்ட
ணத்தைக் கேட்டபோது ஆத்திர
மடைந்த ஒரு மோட்டார் சைக்கி
ளோட்டி, பின்னர் தமது சகாக்க
ளோடு வந்து பெட்ரோல் நிலை
யத்தை அடித்து நொறுக்கினான்.

இச்சம்பவம் புதன்கிழமை நள்ளி
ரவு இங்குள்ள ஒரு பெட்ரோல்
நிலையத்தில் நிகழ்ந்தது என்று
மாவட்ட ஒசிபிடி ஏஎஸ்பி சாலே
யாக்கோப் கூறினார்.

நள்ளிரவு நேரத்தில் அந்த பெட்
ரோல் நிலையத்திற்கு வந்த 20 வய
துடைய ஒரு மோட்டார் சைக்கி
ளோட்டி ஒரு வெள்ளி எழுபது
காசுக்கு பெட்ரோல் நிரப்பினான்.
ஆனால், பெட்ரோல் நிலைய ஊழி
யரிடம் அவன் ஒரு வெள்ளி மட்
டுமே தந்தான்.

எஞ்சிய 70 காசைத் தரும்படி அந்த
ஊழியர் கேட்டபோது, ஆத்திர
மடைந்த அந்த மோட்டார் சைக்கி
ளோட்டி முரட்டுத்தனமாக நடந்து
கொண்டதுடன், அங்கிருந்து சென்ற
சுமார் 30 நிமிடத்திற்குப் பின்னர்
தமது சகாக்களுடன் வந்தான். 34
மோட்டார் சைக்கிள்களில் வந்த
அந்தக் கும்பல் தடி, இரும்புத் தடி
மற்றும் கற்களைக் கொண்டு
பெட்ரோல் நிலையத்தை அடித்து
நொறுக்கியது. இதனால் வெ. 5
ஆயிரம் இழப்பு ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் பெட்ரோல்
நிலைய ஊழியரும், அவரது 16
வயது நண்பரும் காயமடைந்தனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 5 |
| — | Unnecessary splitting of words. | – |
| ⊘ | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 5 |
| | **Performance errors** | |
| I | Unnecessary splitting of words. | 13 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ◩ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

சுங்கைப்பட்டாணி, ஜுலை 27-
கோலமூடா மாவட்ட போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு போலீசார் நேற்று முன்தினம் இரவு சுங்கைப் பட்டாணி கம்போங் ராஜா என்ற இடத்தில் இரண்டு ஆடவர்களை கைது செய்து அவர்களிடமிருந்து கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

பொது மக்களிடமிருந்து கிடைக்
கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து கோலமூடா மாவட்ட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் தலைவர் ஏஎஸ்பி அரிப் ஒமார் தலைமையில் சென்ற போலீஸ் கம்போங் ராஜா என்ற இடத்தில் மறைந்து இருந்த தாக கோல மூடா மாவட்ட ஒசி பிடி ஏசிபி முகமட் அரிபின் அஹ்
மாட் கூறினார்.

அப்போது, இரண்டு ஆடவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தனர். இவர்களை சுற்றி வளைத்தனர். அவ்விரு நபர்களிடமிருந்து போலீ
சார் இரண்டு பொட்டலங்களை பறிமுதல் செய்தனர். அந்த இரண்டு பொட்டலங்களும் பதனிடப்பட்ட கஞ்சா என்று ஒசிபிடி கூறினார்.

இவர்களிடம் விசாரணை நடத்
திய பின்னர் ஒரு வீட்டிற்கு அருகில் மண்ணில் புதைத்து வைத்திருந்த மேலும் ஒரு கஞ்சா பொட்ட
லத்தை போலீசார் கைப்பற்றியதாக அவர் செய்தியாளர்களிடம் தெரி
வித்தார்.

இரண்டாயிரம் கிராம் கஞ்சாவை இவ்விரு நபர்களிடமிருந்து போலீ
சார் கைப்பற்றியுள்ளனர். இந்த மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சா நான்காவது மிகப்பெரிய அளவிலானதாகும்.

25 வயதுடைய உணவுக் கடைக்
காரரும், 28 வயதுடைய வேலை இல்லாத நபரும் சுங்கைப்பட்டாணி
யில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து இந்த வட்டாரத்தில் கஞ்சா வினியோகித்து வந்துள்ளனர்.

இவர்கள் இருவரை கைது செய்த தன் வழி இந்த வட்டாரத்தில் போதைப்பொருளை வினியோ
கித்து வந்த ஒரு கும்பலை போலீ
சார் முறியடித்துள்ளதாக ஒசிபிடி தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் அபாயகர
மான போதைப்பொருள் சட்ட விதி (39பி)யின் கீழ் விரைவில் நீதி மன்றத்தில் குற்றஞ்சாட்டப்படுவர். குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்
டால் கட்டாய மரணதண்டனை விதிக்கப்படும்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 8 |
| — | Unnecessary splitting of words. | - |
| ⊘ | Junction features | - |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ▭ | Using the wrong English / Malay translation. | — |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 12 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ⊠ | Addition / Omission of a letter. | - |
| ⊂> | Omission / Replacement of a word. | — |
| ◫ | Unnecessary joining of words. | — |

பினாங்கு, ஜூலை 27-

இந்து சமயத்தை இழிவுபடுத்தும் கையேடுகளை வினியோகிக்கும் வெளிநாட்டு(i) கும்பல்களுக்கு எதிராக இந்துக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என பினாங்கு இந்து சமூக நல மன்றம் கேட்டுக் கொண்டது.

இந்து சமய தெய்வமான காளியை ரத்தப் பலி கேட்கும் தெய்வமாக(i) சித்தரிக்கும் கையேடுகளை வினி யோகிக்கும் மேற்கத்திய நாட்ட வர்களுக்கு எதிராக (i) போலீசில் புகார் செய்யுமாறு அம்மன்றத்தின் தலைவர் திரு.கே. பி. முருகையா கேட்டுக் கொண்டார்.

உயிர்ப்பலியும் ரத்தமும் கேட்பதாக இந்து சமயத்தை(i)சித்தரித்து இந்து சமயத்தை(i)சாத்தான் வேதம் என் றும் இழிவுபடுத்தும் அந்த(i)கையேடு கள் பினாங்கு வட்டாரத்தில் பரவ லாக வினியோகிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்பு உள்ளூர்வாசிகள் வீடு வீடாகச் சென்று இந்த(i) கையேடு களை வினியோகித்து வந்தனர். ஆனால், கடந்த சில நாட்களாக பினாங்கின் பரபரப்புமிக்க ஜோர்ஜ் டவுன் அலுவலகப் பகுதிகளில் வெள்ளைக்காரர்கள் இந்த(i) கையேடுகளை வினியோகித்து வருகின்றனர்.

இந்த வெளிநாட்டுக் கும்பலின் அத்து மீறிய நடவடிக்கை இந்துக் களை(i) புண்படுத்தியுள்ளதோடு ஆத்திரமடையச் செய்திருப்பதாக வும் முருகையா குறிப்பிட்டார்.

பல குடும்பங்கள் பிரிந்து போகவும், கணவன், மனைவி, பிள்ளைகளிடையே பிணக்குகள் வளரவும் இந்த(i)பொறுப்பற்ற கும் பல்களின் சமயப் பிரசாரங்கள் வழி வகுத்துள்ளன.

பொட்டு வைப்பது,
அணிவது மற்றும் மிஞ்சி அணி
போன்ற பண்பாட்டு வழக்கங்
கடவுளுக்கு எதிரானவை என்
கற்பிக்கப்படுகிறது.

இந்து சமயத்திற்கு எதிரான
போன்ற பிரசாரங்களையும்
மாற்று நடவடிக்கைகளையும்
யடிக்கும் நோக்கில் பினாங்கு ப
லத்தின் ஆறு சமய இயக்கங்கள
பினாங்கு இந்து சங்கம், பினா

இந்து சபா, பினாங்கு இந்து இ
ஞர் இயக்கம், பினாங்கு இந்து த
மாமன்றம், சைவ சித்தாந்த மன்ற
மற்றும் பாயான் லெப்பாஸ் மு
முனீஸ்வரர் ஆலயம் ஆகிய இயக்க
கள் ஒன்றிணைந்து பினாங்கு இந்
சமூக நல மன்றத்தை அமைத்து
ளன.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (i) | Junctional features. | 8 |
| — | Unnecessary splitting of words. | - |
| ⊘ | Junction features | - |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | - |
| ▭ | Using the wrong English / Malay translation. | - |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 15 |
| □ | Wrong usage of punctuation marks. | - |
| ☒ | Addition / Omission of a letter. | 4 |
| ф | Omission / Replacement of a word. | - |
| ◫ | Unnecessary joining of words. | - |

கோலாலம்பூர், ஜூலை 30-
அதிகரித்துவரும் போதை மாத்தி
ரை உட்கொள்ளும் பழக்கத்திற்கு
எதிரான போராட்டத்தை முடுக்கி
விடும் நோக்கில் பார்கள் பப்கள்
மற்றும் கேளிக்கை மையங்களில்
உள்துறை அமைச்சு திடீர்
சோதனை நடவடிக்கை மேற்
கொள்வதை அதிகரிக்கும்.

சிந்தனையை சிதறடிக்கும்
போதைப் பொருளுக்கு எதிராக
மேற்கொள்ளும் கடுமையான
அமலாக்க நடவடிக் கையின் ஒரு
பகுதிதான் இந்த திடீர் சோதனை
களாகும் என்று உள்துறை துணை
யைச்சர் ஓங் கா திங் கூறினார்.

எக்ஸ் டெசி (ECSTASY)
என்ற போதை மாத்திரைகள்
உட்பட 395,455 மாத்திரைகளைப்
போலீசார் இந்த ஆறு மாத காலத்
தில் கைப்பற்றியுள்ளனர். கடந்த
ஆண்டு முழுதும் கைப்பற்றப்பட்ட
59,541 மாத்திரைகளைக் காட்டி
லும் இது ஆறு மடங்கு அதிகமாகும்.

நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்
கணக்கிலும் போதை மாத்திரைகள்
பறிமுதல் செய்யப்பட்டுள்ளதானது
போதை மாத்திரைகளை சட்டத்
திற்குப் புறம்பாகப் பயன்படுத்து
வது அதிகரித்து வருகிறது என்
பதைக் குறிக்கிறது.

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி
வைக்கப்படவேண்டியது அவசிய
மாகிறது. ஏனெனில் இம்மாதிரி
யான போதை மாத்திரைகள்
சமூகத்தைப் பெரிதும் பாதிக்கிறது
என்பதுடன் பல இளைஞர்கள்
இந்த போதை மருந்துக்கு அடிமை
யாகி உள்ளனர் என்று ஓங் கா திங்
வலியுறுத்தினார்.

பெரும்பாலான போதை மாத்தி
ரைகள் "பப்கள்" மற்றும் இதர
கேளிக்கை மையங்களிலிருந்தும்
தான் கைப்பற்றப்பட்டுள்ளன.
எனவே, எதிர்காலங்களில் இம்
மாதிரியான இடங்கள்தான் குறி
வைக்கப்படும் என்று ஓங் கூறினார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 4 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | - |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | - |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 2 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 14 |
| □ | Wrong usage of punctuation marks. | 5 |
| ☑ | Addition / Omission of a letter. | 2 |
| ɸ | Omission / Replacement of a word. | 2 |
| ◫ | Unnecessary joining of words. | - |

யாழ்ப்பாணம், ஜூலை 30-
முல்லைத் தீவில் கிடைத்த மரண
அடியால் சிங்கள ராணுவம்
மிருக்வெறித் தாக்குதல் நடத்தியது.
இதனால் 1 லட்சம் தமிழர்கள்
மூட்டை முடிச்சுகளுடன் வெளி
யேறினார்கள்.

முல்லைத்தீவு பகுதியில் விடு
தலைப்புலிகள் நடத்திய அதிரடித்
தாக்குதலில் சிங்கள வீரர்கள்
ஓட்டம் பிடித்தனர். இதற்குப் பதி
லடி கொடுக்கும் வகையில் அதிரடி
தாக்குதலில் இறங்கினார்கள். விடு
தலைப்புலிகளின் அரசியல்
தலைமை இடமான கிளிநொச்சி
நோக்கி முன்னேறினார்கள்.

சிங்களப் படையினர் மேற்
கொண்டிருக்கும் அதிரடி தாக்குதல்
காரணமாக கிளிநொச்சியில் இருந்
தும் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்
தும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான
தமிழர்கள் இடம்பெயர்ந்து உள்ள
னர். சிங்களர் படை மேற்
கொண்டிருக்கும் வெறித்தனமான
தாக்குதலில் இருந்து தப்ப[ ]கால்
நடையாகவும், சைக்கிள்களிலும்
மாட்டு வண்டிகளிலும் கையில்
கிடைத்த பொருள்களுடன் அவசர
மாக வெளியேறினர். அப்போது
மாட்டு வண்டி ஒன்று பாதையில்
கவிழ்ந்ததால் ஒரே குடும்பத்தைச்
சேர்ந்த இரு பெண்கள் நசுங்கி
மாண்டனர். சிங்கள ராணுவ ஏவு
கணைத் தாக்குதலில் இரணைமடு
தெருவில் ஒரு ஆணும் இரு
பெண்களும் உடல் சிதறிப் பலி
யானார்கள்.

முல்லைத்தீவில் விடுதலைப்புலி
களிடம் பெற்ற மரண அடியால்
ஆத்திரம் கொண்டுள்ள படையின
ரின் கட்டற்ற இந்தப் பயங்கரவாத
வெறியாட்டத்தில் பொதுமக்களின்
சொத்துக்கள் அழிக்கப்பட்டு உள்
ளன. வீடு, வாசல்கள் அழிந்து
போயின. பெரும் அளவில் தமிழர்
கள் காயம் அடைந்து உள்ளனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 3 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 2 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ▭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ❘ | Unnecessary splitting of words. | 13 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ⧄ | Addition / Omission of a letter. | 1 |
| ф | Omission / Replacement of a word. | 1 |
| ◫ | Unnecessary joining of words. | – |

சிரம்பான், ஜூலை 31-

லெங்கெங் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளி நாட்டு கள்ளக்குடியேறிகளை வேலைக்கு அமர்த்துவதற்கு சில நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருவதாக மந்திரி புசார் டான்ஸ்ரீ முகமட் இசா அப்துல் சமாட் கூறினார்.

தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கள்ளக்குடியேறிகளுக்கு முறையான அனுமதி பத்திரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருவதால், அவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு சில நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருகின்றன. எனினும் சில நிறுவனங்கள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்படாத கள்ளக் குடியேறிகளை வேலைக்கு வைத்துக்கொள்வதற்கு அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு காரணம் அவர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதேயாகும் என்று மந்திரி புசார் விளக்கினார்.

கடந்தாண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில் 629 கள்ளக்குடியேறிகள் தடுத்து வைக்கப்பட்டனர். இதுவரையில் 1,619 பேர் லெங்கெங் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தோனேசியர்களாவர். தொடர்ந்து வங்காளதேசிகளும் மற்ற நாடுகளை சேர்ந்தவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்த கால கட்டத்தில் 215 பேர் தத்தம் சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய நால்வர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக காத்திருப்பதாகவும் டான்ஸ்ரீ முகமட் இசா மேலும் சொன்னார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 12 |
| — | Unnecessary splitting of words. | – |
| ⌀ | Junction features | 1 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | – |
| ▭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 7 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⧄ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

கோலாலம்பூர், ஆக 1-

ஹெறோயின் போதைப் பொருள், சந்தையில் குறைந்துள் ளது. இதனை பயன்படுத்தி அதிலே மாவு, மணல் மற்றும் மரத்தூள் ஆகியன சேர்த்து விற்கப் படுவதாக போலீசார் கூறினர்.

வழக்கமான போதைப் பொருளை காட்டிலும் ஹெறோயினில் 95 விழுக்காடு அளவில் பல்வேறு தூள்கள் சேர்க்கப்பட்டு சந்தையில் அது போதைப் பித்தர்களுக்கு விற்கப்படுவதாக புக்கிட் அமான் போதைப்பொருள் துடைத்தொழிப்பு இலாகா தலைவர் டத்தோ சாலே மட்சோம் சொன் னார்.

ஹெறோயின் போதைப் பொருளை பயன்படுத்து வோருக்கு, உண்மையில் ஐந்து விழுக்காட்டிற் கும் மேற்போகாத தரமான ஹெறோயின் மட்டுமே கிடைக் கிறது.

சந்தையில் விற்கப்படும் ஹெறோ யின் இயற்கையான ஒன்றல்ல. அதிலே பலவகை தூள்கள் சேர்க்கப்பட் டுள்ளன என்றார் டத்தோ சாலே.

போதைப்பொருளை வினியோகிக்கும் நபர்கள் அதிலே கலப்படம் செய்வதுடன் அதனை உட்கொள் பவருக்கு தீராத சங்கடத்தையும் ஏற்படுத்திவிடுகின்றனர். அரச மலேசிய போலீஸ் வீரர்கள் மேற் கொண்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக ஹெறோயின் வினி யோகம் குறைந்துள்ளது என்றார் அவர்.

இந்த ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் 125.12 கிலோ கிராம் ஹெறோயின், 395,455 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட் டுள்ளன. கடந்தாண்டு இதே காலக் கட்டத்தில் 22.39 கிலோ கிராம் ஹெறோயினும் 26,915 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன.

மேலும் 799.6 கிலோ கிராம் கஞ்சாவும், 1.41 கிலோ கிராம் அபினும் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு போதைப் பொருள் குற்றச்செயல்களுக்காக 5,594 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 7 |
| — | Unnecessary splitting of words. | 2 |
| Ø | Junction features | - |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | - |
| ⬭ | Using the wrong English / Malay translation. | - |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 10 |
| □ | Wrong usage of punctuation marks. | - |
| ☑ | Addition / Omission of a letter. | - |
| ɸ | Omission / Replacement of a word. | - |
| ◫ | Unnecessary joining of words. | - |

சென்னை, ஆக. 3-

காங்கிரஸ் சொத்துக்களை தமிழ் மாநில் காங்கிரஸ் கைப்பற்றுவதற்கு குமரி அனந்தன் கண்டனம் தெரிவித்தார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது:

மார்ச் 29ந் தேதி சத்தியமூர்த்தி பவனை கைப்பற்றினார்கள். அன்றே புகார் செய்யப்பட்டது. அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

கடலூரில் காங்கிரஸ் வசம் இருந்த ஜவகர்பவனை கைப்பற்றிக் கொண்டார்கள். அரசு அதிகாரிகள் இருவருக்கும் இல்லை என்று பூட்டி விட்டு சாவியை தமாகாவிடம் கொடுத்து விட்டார்கள். புதுக்கோட்டை, மன்னார்குடி, தாலுகா பரவாக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள அலுவலகம், 40 ஆண்டுகளாக காங்கிரஸ் அலுவலகமாக இயங்கி வந்த திருச்சி அருணாசல மன்றம் ஆகியவற்றையும் தமாகாவினர் கைப்பற்றிக் கொண்டனர்.

தஞ்சாவூரில் 1953ம் ஆண்டிலிருந்தே இந்திய தேசிய காங்கிரஸ் வசம் இருக்கும் கட்டிடத்தை 31.7.96 அதிகாலையில் சுந்தரப் பெருமாள் கோயிலில் இருந்து கட்சியின் தலைவரால் தூண்டிவிடப்பட்ட 300 பேர் கொண்ட தமாகா கும்பல் பயங்கர அடியாட்களுடன் சென்று பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து ஆவணங்களை எரித்து மூப்பனாரையே அரசியலுக்கு அறிமுகப்படுத்திய பூண்டி கிருஷ்ணசாமி வாண்டையாரின் திருஉருவப் படத்தை வெளியே போட்டு உடைத்திருக்கிறது.

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் உள்ள காங்கிரஸ் அலுவலகங்களையும் அபகரித்துக் கொண்டார்கள்.

வன்முறையை எதிர்த்துப் பேசியவர் ரஜினிகாந்த். அந்த பேச்சை ஆதரித்து அவருக்கு முதன் முதலாக பொன்னாடை போர்த்திய இந்த குமரி அனந்தனையும், மற்றவர்களையும் உள்ளே விடாமல், வெளியேற்றி விட்டு கட்டிடங்களை அபகரித்தார்களே இது அராஜகம் இல்லையா? அதை ரஜினி கேட்க வேண்டும் என்பது இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

வாழப்பாடி அணியினர் காங்கிரஸில் சேருவதால் கோஷ்டி பூசல் வளராது. காரணம் நாலும் வாழப்பாடியும் காங்கிரஸ் ஒன்றாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 8 |
| — | Unnecessary splitting of words. | 2 |
| ∅ | Junction features | 1 |
| ǁ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 14 |
| □ | Wrong usage of punctuation marks. | 2 |
| ☒ | Addition / Omission of a letter. | 2 |
| Φ | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

தெலுக் இந்தான், ஆக. 7-

போலீஸ் மற்றும் ராணுவத்திற்கு அடுத்தபடியாக
நம் நாட்டின் முக்கிய பாதுகாப்பு அம்சமாக ரேலா
தொண்டூழியப்படை திகழ்ந்து வருவதாக உள்துறை
துணை அமைச்சர் டத்தோ மெகாட் ஜுனிட் பின்
மெகாட் ஆயோப் கூறினார்.

தற்போது நாட்டில் 26 ஆயிரம் ரேலா தொண்டூழியப்
படை வீரர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள்
841 பிளாட்டுன்கள் மூலமாக சேவையில் ஈடுபட்டுள்ள
னர்.

அவர்களின் சேவையை அரசாங்கம் முழுமையாக
மதிக்கிறது. நம் நாட்டின் அனைத்து நிலையிலான
பாதுகாப்பு அம்சங்களிலும் ரேலா படைவீரர்கள்
முக்கிய பங்காற்றி வருகின்றனர் என்றார் அவர்.

நேற்று முன்தினம் மாலை தெலுக் இந்தான் நகர
மண்டபத்தில் நடைபெற்ற ரேலா படை வீரர்களுட
னான சந்திப்பு மற்றும் அவர்களுக்கு துப்பாக்கிகள்
மற்றும் டீ சட்டைகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைமை
தாங்கி சிறப்புரையாற்றிய அவர் மேற்கண்டவாறு
கூறினார்.

நாடு முழுவதும் மக்களோடு மக்களாக கலந்திருக்
கும் ரேலா வீரர்கள் பாதுகாப்பு அம்சங்களுக்கு
மிரட்டல் ஏற்படும்போதும் போதைப் பித்தர்கள்,
போதைப் பொருள் கடத்தல் பேர்வழிகள் சட்ட
விரோத குடியேற்ற வாசிகள், கள்ளக் கடத்தல்காரர்
கள் மற்றும் பல்வேறு சமூக விரோதிகளை அடை
யாளம்கண்டாலும் ரேலா உறுப்பினர்கள் அருகாமையில்
உள்ள போலீஸ் நிலைய அதிகாரிகளுடன் தொடர்பு
கொண்டு தக்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.
மேலிடத்து உத்தரவு வரும் வரை காத்திருக்கக்கூடாது
என்றும் டத்தோ மெகாட் கேட்டுக் கொண்டார்.

தற்போது ரேலா தொண்டூழியப்படை அனைத்து
நிலையிலும் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாது
காப்பு படைப்பிரிவிற்கு மாவட்ட மாநில மற்றும்
தேசிய ரீதியில் பொறுப்பேற்றுள்ளவர்கள் நல்ல
அனுபவசாலிகள். இவர்கள் போலீஸ் மற்றும் ராணுவத்
தில் பல்வேறு உயர்பதவிகளை வகித்தவர்கள்.
நாட்டின் தற்காப்பு துறையில் பல்வேறு சிறப்பு
பயிற்சிகளைப் பெற்றவர்கள் என்றும் அவர் கூறினார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 9 |
| —— | Unnecessary splitting of words. | 3 |
| ⊘ | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 7 |
| □ | Wrong usage of punctuation marks. | 2 |
| ⊠ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | – |
| ⅅ | Unnecessary joining of words. | 1 |

தினமுரசு

நடுநிலை நாளேடு

PP 5887/1/96

HARIAN TAMIL THINA MURASU

கோலசிலாங்கூர்,
ஜூலை 24-

சுங்கை சிலாங்கூர் நீர்
சப்ளை திட்டத்தின் இரண்டாம்
கட்டததின் கீழ் அன்றாடம் 95
கோடி லிட்டர் தண்ணீர்
கிடைக்கும் கோலாலம்பூர் மற்
றும் சிலாங்கூரின் எதிர்கால
தண்ணீர் தேவைகளை இது
நிறைவு செய்யும்.

சிலாங்கூர் மந்திரி
புசார் டான் ஸ்ரீ முகமட். ஹாஜி
முகமட் தைப் நேற்று இதனை
தெரிவித்தார் இந்த 130
கோடி ரிங்கிட் திட்டம்
தொழிற்சாலைகளுக்கும் குடி
யிருப்புகளுக்கும் மிகவும் பயன
ளிக்கும் என்றார் அவர்.

புக்கிட் பாருங்கில்
உள்ள சுங்கை சிலாங்கூர் நீர்
தேக்கம் பெர்ண ம் பள்ளத்
தாக்கு, வட மேற்கு சபாக்
பெர்ணம், தெற்கு மற்றும்
மேற்கு பகுதிகள் புலாவ்
இன்டா, மற்றும் பல கடலோர
தீவுகளுக்கு தண்ணீர் வழங்கும்.

அத்திட்டத்தை டத்தோ
ஸ்ரீ ச.சாமிவேலு நேற்று
தொடக்கி வைத்தார்.

2000 ஆண்டு முதல்
சிலாங்கூருக்கு ஒவ்வொரு
ஆண்டும் 400 கோடி முதல்
500 கோடி ரிங்கிட் மதிப்
பிலான கூடுதல் முதலீடு
கிடைக்கும் என்பதால் இத்
திட்டம் மிக முக்கியமானது
என்று அவர் சொன்னார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 5 |
| ___ | Unnecessary splitting of words. | – |
| ⊘ | Junction features | 2 |
| ll | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 7 |
| ▢ | Wrong usage of punctuation marks. | 3 |
| ⊠ | Addition / Omission of a letter. | – |
| ⌽ | Omission / Replacement of a word. | 1 |
| ⎅ | Unnecessary joining of words. | – |

நேற்றுக்காலை நிகழ்ந்த
இந்தச் சம்பவத்தில் விமானியும்
சகவிமானியும் உயிர்தப்பியதாக
லாபுவான் போலீஸ் நடவடிக்
கை அறைக்கு கிடைத்த
தொடக்கத் தகவல்கள் கூறின.

காலை 8.05 மணிக்கு
முதல் தகவல் கிடைத்ததாக
போலீஸ் பேச்சாளர் ஒருவர்
கூறினார்.

அந்த விமானம் இப்
போது நடைபெற்றுக் கொண்
டிருக்கும் வீரங்சா என்ற

பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்
டிருந்தது.

போலீஸ் அப்பகுதிக்கு
விரைந்து தடுப்பை ஏற்படுத்திய
தோடு போக்குவரத்தை கண்
காணித்தது. அரச மலேசிய
ஆகாயப்படை அதிகாரிகள்
விபத்துக்கான காரணத்தை
ஆராய புலன் விசாரணைகளை
தொடங்கினர்.

பிரிட்டிஷ் ஏரோஸ்
பேஸ் விமான நிறுவனத்திட
மிருந்து கடந்த ஆண்டு வாங்
கிய ஹாக் ரக விமான்ங்களில்
விபத்துக்குள்ளான இரண்டா
வது விமானமாகும் இது.

கடந்த மாதம் நடை
பெற்ற முதல் விபத்தில் பட்டர்
வொர்த் விமானத் தளத்திற்கு
அருகே உள்ள நெல்வயல்
பகுதியில் முதல் விமானம்
விழுந்து நொறுங்கியது. அப்
போது விமானியும் சக விமானி
யும் உயிர்தப்பினர்.

மொத்தம் 28 ஹாக்
விமானங்கள் 240 கோடி
ரிங்கிட்டிற்கு கொள் முதல்
செயயபபட்டன.

அவற்றுள் 10 விமானங்
கள் 100 எஸ் ரகத்தையும் மற்
றும் 18 200 எஸ் ரகத்தையும்
சேர்ந்தவை.

இருப்பினும் அவற்றை
முற்றாகப் பயன்படுத்த இயல
வில்லை. காரணம், அவற்றின்
பாகங்கள் அடிக்கடி செயலி
ழந்து விடுகின்றன.

சுமார் 40 ரகங்களைச்
சேர்ந்த துணைப்பாகங்கள்
அடிக்கடி கெட்டுவிடுகின்றன.
அவற்றை மாற்றுவதற்கு உபரிபா
கங்களைப் பெறுவதில் சமயங்
களில் மூன்று மாதங்கள் வரை
காத்திருக்க நேரிடுகிறது.

திங்கட்கிழமை தொடங்
கிய விமானப் பயிற்சியில்
ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட
நான்கு எம்.யெ.ஜி. 29 ரக
ஜெட் போர்விமானங்களும் 16
குண்டு வீசும் ஹாக் ரக
விமானங்களும் ஈடுபட்டுள்ளன.

தாக்குதல், தற்காத்தல்
இரண்டிலும் உள்ள திறமையை
சோதிப்பது இந்தப் பயிற்சியின்
நோக்கமாகும்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 6 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 1 |
| ll | Illogical / Incomplete sentence construction. | – |
| ⊂⊃ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| l | Unnecessary splitting of words. | 18 |
| □ | Wrong usage of punctuation marks. | 3 |
| ☒ | Addition / Omission of a letter. | – |
| ф | Omission / Replacement of a word. | 1 |
| (I) | Unnecessary joining of words. | – |

பெட்டாலிங் ஜெயா,
ஜூலை 25
ஜாலான் டெம்பளரில்
விவேகானந்தா தமிழ் தொடக்
கப்பள்ளிக்கு அருகாமையில்
புதிதாக எழும்பி வரும் அலுவல
கட்டிடம் ஒன்றின் நிர்மாணப்
பணிகளை நிறுத்தி வைக்கு
மாறு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்
தரவு இவ்வார இறுதிக்குள்
ரத்து செய்யப்படும் என தெரி
கிறது.

அதன் தொடர்பாக
தொழில் பாதுகாப்பு, சுகாதாரம்
குறித்த சிலாங்கூர் மற்றும்
கூட்டரசுப் பிரதேச இலாகா
அனுப்பியுள்ள புகாரை நகராண்
மைக்கழகம் பரிசீலித்து வருவ
தாக அதன் தலைவர் முகமட்
நோர் படோர் அறிவித்தார்.
நகல் ஒன்றை நாங்கள் அண்
மையில் பெற்றோரும் நிர்மாண
வேலைகள் நடை பெறும் பகுதி
களில் நிலவும் பாதுகாப்பு நட
வடிக்கையில் எங்களின் கவனம்
செலுத்தப்படும்.

பரிசீலனை மேற்கொள்
ளப்பட்ட பின்னரே நகராண்
மைக் கழகம் அதன் முடிவைத்
தெரிவிக்க இயலும் என அவர்
சொன்னார்.

புகாரில் அடங்கியுள்ள விவ
ரங்களை அவர் கூற மறுத்து
விட்டார். ஆனால் நிர்மாணப்
பணியைத் தொடரலாமா இல்
லையா என்பதனை முடிவு
செய்ய அந்தப்புகார் எம்.பி.பி
ஜேக்கு உதவியாக இருக்கும்
என அவர் சொன்னார்.

நிர்மாணப் பணிகள் மீண்டும்
தொடங்கும் போது பாதுகாப்பு
நடவடிக்கைகளை மேலும் கடு
மைப்படுத்தவும் புகார்
உதவியாக இருக்கும் என
அவர் சொன்னார்.

பதினைந்து மாடி கட்டிட
வேலை பித்தார்ராயா சென்
டிரியான் பெர்ஹாட் தொடர்
வதா இல்லையா என்பதனை
புகார் பற்றி மன்றம் பரிசீலித்த
பின்னரே சாத்தியம். ஒரு
வேளை அனுமதித்தாலும்
மாலை 6 மணிக்குப் பின்னரே
நிர்மாண வேலைகள் தொடங்க
வேண்டும். அடுத்த நாள்
காலை பள்ளி தொடங்கு முன்
னரே வேலைகள் நிறுத்தப் பட
வேண்டும் என அவர் நிபந்த
னைகள் பிறப்பித்தார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | |
| —— | Unnecessary splitting of words. | |
| ∅ | Junction features | |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | |
| ⬭ | Using the wrong English / Malay translation. | |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | |
| ☐ | Wrong usage of punctuation marks. | |
| ⊠ | Addition / Omission of a letter. | |
| ɸ | Omission / Replacement of a word. | |
| ◫ | Unnecessary joining of words. | |

கூலிம், ஜூலை. 25

கூலிம் மாவட்டத்தில் இருக் கும் ஏழைகளுக்கு அவர்கள் குடியிருக்க தனி இடம் இம்மா வட்டத்தில் ஒதுக்க வேண்டும் என்று கெடா மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ சனூசி ஜுனிட் கூலிம் மாவட்ட அதி காரி டத்தோ கூ நாஹார் பின் கூ இப்ராகிமை கேட்டுக் கொண்டார்.

ஒதுக்கப்படும் அந்நிலத்தில் ஏழைகளுக்கு தேவைப்படும் வீடு அதை அடுத்து விவசாய செய்ய நிலம் மற்றும் தால் நடை வளர்க்க இடம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இதன் மூலமாக இவ்விடத்தில் இருக்கும் ஏழைகள் தங்கள் பொருளாதாரத்தில் முன்னேற வாய்ப்பாக இருக்கும் ஆகவே ஏழைகள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களுக்கு தனி இடம் ஒதுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அதேபோல் புறம் போக்கு நிலத்தில் குடியிருக்கும் குடிசை வாசிகளின் நிலங்கள் மேம்பாட் டுத்திட்டத்திற்கு எடுக்கும் போது அவர்கள் தற்காலிக மாக குடியிருக்க முதலில் வீட்டைக் கட்டித்தர வேண்டும்.

அதை விடுத்து புறம்போக்கு நிலத்தில் இருக்கிறார்களே என்று குடியிருக்கும் குடிசை வீடுகளை இடித்துத் தள்ளக் கூடாது. இப்படி செய்வதால் குடிசைவாசிகள் எங்கு போவார் கள். இதனால் அவர்கள் பல பிரச்னைகளை எதிர்நோக்கு வார்கள்.

இங்குள்ள மாவட்ட அலுவல கத்தில் மாவட்ட அதிகாரி, மற்றும் சட்டமன்றம், நாடாளு மன்றம், அரசாங்க அலுவலக

சந்திப்புக்கூட்டத்திற்கு பிறகு அவர் மேற்கண்டவாறு நிருபர் களிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இம்மாநிலத்தில் வீடமைப்பு மேம்பாட்டாளர்கள் வீடு கட்டும் போது அதிக விலை வீட்டை கட்டுவதோடு மட்டுமல்லாமல் மலிவு விலை வீட்டையும் கட்ட முற்பட வேண்டும். இதற்கு முக் கியத்துவம் கொடுக்க வேண் டும்.

மலிவு விலை வீட்டை கட்டும் திட்டத்தை ஒதுக்க வேண் டாம். இம்மாவட்டத்தில் மலிவு விலை வீடு வாங்குபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

| Symbol | Types of Errors | Number of Errors |
| --- | --- | --- |
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 9 |
| — | Unnecessary splitting of words. | 4 |
| Ø | Junction features | – |
| ][ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 14 |
| □ | Wrong usage of punctuation marks. | 4 |
| ☑ | Addition / Omission of a letter. | – |
| ɸ | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

துணை உள்துறை அமைச்சர் டத்தோ மெகாட் ஜுனிட் மெகாட் அயூப் நேற்று இதனை தெரிவித்தார்.

வங்காளதேசம், இந்தோனேசியா, பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கள்ளத் தொழிலாளர்கள் இவ்வாறு பதிவு பெற தகுதி பெற்றுள்ளனர்.

கள்ளத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவர்கள் இருக்குமிடம், அவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற விபரத்தை அரசாங்கம் பெறவும், தொழிலாளர் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு பெற இந்நடவடிக்கை உதவும் என மெகாட் ஜுனிட் கூறினார்.

இவ்வாண்டு ஜுலை 10 ஆம் தேதி அல்லது அதற்கு முன்பிருந்து தங்களிடம் வேலைபார்க்கும் கள்ளக் குடியேறிகளின் பெயர் மற்றும் பயணப் பத்திரங்களை குடியேறிகள் பணிக்குழுவிடம் சமர்பிக்க வேண்டும்.

சிலாங்கூர் மற்றும் கோலாலம்பூரில் உள்ள முதலாளிகள் பணிக்குழுவிடம் நேரில் பதிவு செய்யலாம். இதர மாநிலங்களில் உள்ளவர்கள் அங்குள்ள இமிகிரேஷன் அலுவலக பணிக்குழு அதிகாரிகளிடம் பதிந்துகொள்ள மெகாட் ஜுனிட் கூறினார்.

முதலாளிகள் ஆகஸ்ட் 15 முதல் பதிவு படிவங்களைப் பெறலாம். டிசம்பர் 31 க்குள் பூர்த்தி செய்யப்பட்ட அந்த படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

கட்டண விபரம்

ஒரு தொழிலாளிக்கு உள்ள தேர்ச்சி, அவர் எந்த துறையில் வேலை பார்க்கிறார் என்பதை பொருத்து லெவி கட்டணம் விதிக்கப்படும்.

மேலும் கீழ்காணும் கட்டணங்களையும் அவர் செலுத்த வேண்டும்:-

தற்காலிக வேலை விசிட் பாஸ் ( பி எல் கே எஸ்) விசா 60 ரிங்கிட்,15 ரிங்கிட்,20 ரிங்கிட் , கள்ளக்குடியேறிக்கான கம்பவுண்டு அபராதம் 300 ரிங்கிட், முதலாளிக்கான அபராதம் 300 ரிங்கிட், பாதுகாப்பு டிப்பாசிட் பயணப் பத்திரம் வைத்துள்ள கள்ளக் குடியேறிகளுக்கு ஓராண்டு கால 'பி எல் கேஸ்' வழங்கப்படும் பயணப் பத்திரம் இல்லாதவர்களுக்கு 6 மாதகால வேலைக்குரிய சிறப்பு இமிகிரேஷன் பத்திரமும் வழங்கப்படும். இவர்கள் இங்குள்ள தங்கள் நாட்டுத் தூதரகங்களிடம் பயணப்பத்திரம் பெறவேண்டும்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 6 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ∅ | Junction features | 1 |
| II | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| I | Unnecessary splitting of words. | 7 |
| ☐ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☑ | Addition / Omission of a letter. | 1 |
| Φ | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

கோலப்பிலா, ஜூலை 26
நெகிரி மாநில சுகாதார
இலாகா மேற்கொண்ட திடீர்
சோதனையில் அசுத்தமாக
செயல்பட்டு வந்த கோலப்
பிலாவைச் சேர்ந்த இரண்டு
உணவகங்களையும் பகாவைச்
சேர்ந்த ஒரு ரொட்டி மற்றும்
ஒரு மீ தயாரிப்பு நிறுவனங்
களையும் உடனடியாக மூடும்
படி உத்தர விடப்பட்டுள்ளது.

நேற்று காலை 9.30
மணிக்கு தொடங்கி பிற்பகல்
12.30 வரை நீடித்த இந்த
திடீர் சோதனையில் நெகிரி
மாநில துணை சுகாதார
இயக்குநர் டாக்டர் ஹாஜி
ஜலால் பின் ஹாலில் தலை
மையில் கோலப்பிலா மாவட்ட
மன்றம் மற்றும் ஜெம்புல்
மாவட்ட மன்ற அதிகாரிகளின்
ஒத்துழைப்புடன் மேற்கொள்
ளப்பட்டது.

உணவு சட்ட விதிகளை
மீறியுள்ள அந்த நான்கு வர்த்
தக மையங்களும் 14 நாட்க
ளுக்கு வியாபாரம் செய்ய
தடை விதிக்கப்பட்டதுடன்
அவை அனைத்திற்கும் தலா
250 ரிங்கிட் வீதம் அபராதமும்
விதிக்கப்பட்டுள்ளது.

கோலப்பிலா ஜாலான்
லிஸ்டாரில் உள்ள ரெஸ்டாரண்ட்
அரபா மற்றும் சோங் கீ உணவ
கம் ஆகியவற்றிற்கு திடீர்
வருகையளித்த அதிகாரிகள்
சமையல் அறைகள் தூய்மைக்
கேடாக இருந்தது கண்டு
அதிர்ச்சியடைந்ததுடன் கொடு
க்கப்பட்டுள்ள 14 நாட்களுக்
குள் தங்களின் கடைகளை
தூய்மை படுத்தும்படி உத்தர
விட்டுள்ளனர். அவ்வாறு செய்
யத்தவறினால் மீண்டும் 14
நாட்கள் தடை விதிக்கப்படும்
என்று எச்சரிக்கை விடுக்கப்
பட்டுள்ளனர்.

பகாவில் மேற்கண்ட இரு
வெவ்வேறு நடவடிக்கைகளில்
தாமான் சொர்ணத்தில் செயல்
படும் ரொட்டி தயாரிப்பு
தொழிற்சாலை ஒன்று மிகவும்
தூய்மைக்கேடான நிலையில்
இயங்கி வந்துள்ளதால் அந்
நிறுவனத்திற்கு 14 நாட்கள்
தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதே நகரில் ஜாலான் தம்பின்
பத்து கிக்கிர் பகுதியில் செயல்
படும் கான் பிங் சென் மீ
தயாரிப்பு நிறுவனமும் சுகாதா
ரமற்ற நிலையில் இருந்ததால்
அந்நிறுவனத்திற்கு 14 நாட்கள்
தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெகிரி மாநிலத்தில் உள்ள
ஐந்து சுகாதார மாவட்ட இலா
காவிற்கும் வழங்கப்பட்டுள்ள
அதிகாரத்தின் கீழ் ஒவ்வொரு
மாதமும் குறைந்தபட்சமாவது
இரண்டு உணவு சம்பந்தப்பட்ட
மையங்களுக்கு எதிராக இவ்
வாறான தடைகளை விதிக்க
சட்டத்தில் இடம் உள்ளது.
மாநில துணை சுகாதார இயக்
குநர் டாக்டர் ஹாஜி ஜாலால்
தெரிவித்துள்ளார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (I) | Junctional features. | 11 |
| —— | Unnecessary splitting of words. | 2 |
| (Ø) | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| (oval) | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 18 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☒ | Addition / Omission of a letter. | 1 |
| ɸ | Omission / Replacement of a word. | 1 |
| ◫ | Unnecessary joining of words. | – |

கொழும்பு,ஜூலை. 27-

ரயிலில் குண்டு வெடித்து 70 பேர்பலியானதற்கு நாங்கள் காரணம் அல்ல என்று விடுதலைப்புலிகள் அறிவித்து உள்ளனர்.

## ரெயிலில் குண்டு வெடித்து 70 பேர் பலி

இலங்கையின் தலைநகர் கொழும்பு அருகே கடந்த 2 நாட்களுக்கு முன் ரெயிலில் குண்டு வெடித்தது. இதில் 70 க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள ராணுவத்துக்கும் இடையே கடும் போர் நடந்து வரும் நேரத்தில் இந்த குண்டு வெடிப்பு சம்பவம் நடந்துள்ளது. குண்டு வெடிப்புக்கு விடுதலைப்புலிகள் தான் காரணம் என்று சிங்கள அரசு கூறியுள்ளது. இனக்கலவரத்தை ஏற்படுத்த நடந்த சதியின் ஒரு பகுதியே இது என்றும் அதிபர் சந்திரிகா கூறியிருந்தார்.

## விடுதலைப் புலிகள் மறுப்பு

இந்த நிலையில் ரெயில் குண்டு வெடிப்புக்கு நாங்கள் காரணம் அல்ல என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

லண்டனில் இருந்து விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

ரெயில் குண்டு வெடிப்புக்கு எங்கள் மீதுதான் சிங்கள அரசு குற்றம் சாட்டி வருகிறது. இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கைகளை சிங்களவர்களில் பெரும்பாலானவர்கள் எதிர்க்கிறார்கள். அரசின் போர் நடவடிக்கைகளால் சிங்களவர்களின் உயிரும் பலியாகிறது.

பொது மக்களை பலி வாங்குவது விடுதலைப்புலிகளின் நோக்கம் அல்ல என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம். எங்களை தாக்கும் ராணுவத்துடன்தான் நாங்கள் போராடுகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

குண்டு வெடிப்பு தொடர்பாக 200 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 7 |
| — | Unnecessary splitting of words. | 4 |
| ⊘ | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ı | Unnecessary splitting of words. | – |
| □ | Wrong usage of punctuation marks. | 2 |
| ⧄ | Addition / Omission of a letter. | 1 |
| ⏀ | Omission / Replacement of a word. | 3 |
| ◫ | Unnecessary joining of words. | 1 |

கோலாலம்பூர், ஜூலை 27
கடந்த ஆண்டு மேற்
கொள்ளப்பட்ட சம்பளச் சரி
கட்டின் போது தீர்வு காணப்
படாதிருக்கும் அரசு ஊழியர்
களின் இரண்டு பெரிய கோரிக்
கைகள் மீது மீண்டும் பேச்சு
களைத் தொடரும்படி பொதுச்
சேவைத்துறையை கியூபெக்ஸ்
வலியுறுத்தியது.
உயர் அரசாங்க அதிகாரி
களுக்கு வழங்கப்பட்ட உயர்
அலவன்சு மற்றும் இதர ஊக்
குவிப்பு சலுகைகள் உட்பட
அனைத்தையும் முடுமந்திரமாக
வைத்துவிட்டு கியூபெக்ஸ் எழுப்
பிய பல சலுகை கோரிக்கை
களை பல்வேறு சமாதானங்
களைச் சொல்லி பொதுச்
சேவைத் துறை மறுத்தவற்றில்
இரண்டை மட்டும் இப்போது
முன் வைத்து கோரிக்கை
எழுப்புவதாக அதன் தலைவர்
முகமட் மாட் ஜிட் கூறினார்.
அரசாங்க சேவையில்
உள்ள சிறப்பு பிரிவு மற்றும்
உச்சமட்ட நிர்வாகக் குழு
அதிகாரிகளுக்கு உயர் அலவன்
சுகளும் சிறப்பு ஊக்குவிப்புத்
தொகைகளும் இவ்வாண்டு
ஜனவரி முதல் வழங்க அரசாங்
கம் எடுத்துள்ள முடிவை
எதிர்ப்பது என கூட்டத்தில்
கியூபெக்ஸ் முடிவு செய்தது.
உயர்நிலை அதிகாரி
களுக்கு ஊக்குவிப்பு அலவன்சு
தொகை 500 ரிங்கிட்டும்
இடை ஆதாயமாக 500 முதல்
4 ஆயிரம் ரிங்கிட் வரை
அலவன்சுத் தொகையாக
வழங்கப்படும் என பொதுச்
சேவைத் துறை தலைமை
இயக்குநர் டத்தோ டாக்டர்
மஸ்லான் அஹ்மாட் கடந்த
வாரம் அறிவித்தார்.
- பெர்னாமா

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 8 |
| —— | Unnecessary splitting of words. | 3 |
| Ø | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| ǀ | Unnecessary splitting of words. | 12 |
| ☐ | Wrong usage of punctuation marks. | – |
| ◪ | Addition / Omission of a letter. | – |
| Φ | Omission / Replacement of a word. | 2 |
| ◫ | Unnecessary joining of words. | – |

அட்லாண்டா கூடைப்பந்து போட்டியில் பிரேசில் மற்றும் அமெரிக்கா காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றனர். பெண்கள் பிரிவில் பிரேசில் குழு இத்தாலியை 75-73 என்ற புள்ளி கணக்கில் தோற்கடித்தனர் இதுவரைக்கும் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியிலே இந்த ஆட்டம் மிக சிறப்பாக இருந்தது என்று சொல்லலாம்.

இரு குழுவும் வெற்றிக்காக போராடினார்கள். தோல்வியை பற்றி சிந்திக்காமலே இரு குழுவும் மோதின. இதனால் எந்த குழு வெற்றி பெறும் என்று ரசிகர்கள் குழப்பமடைந் தார்கள். மிகவும் விறு விறுப்பான இந்த ஆட்டத்தில், போலா சில்வா மற்றும் ஜேதை அர்கேள் கடைசி நிமிடத்தில் இரண்டு புள்ளிகளை பெற்று தந்ததால், பிரேசில் வெற்றி பெற்றது.

இதற்கிடையில் 'ஏ' பிரிவு மற்றொரு குழுவான உக்ரேன் 54-48 என்று ஆஸ்திரேலி யாவை வீழ்த்தியது. கூடைப் பந்து போட்டியில் நன்கு அனுபவம் பெற்ற குழுவான ஆஸ்திரேலியா தோல்வியை தழுவியது அதிர்ச்சியை ஏற்படுத் தியது.

உக்ரேன் குழுவின் ஒக்சானா மற்றும் யுட்மிலா 15, 13 புள்ளிகள் பெற்று தந்தனர். மற்ற 15 புள்ளிகள் பெனால்டி மூலம் உக்ரேன் குழு பெற்றது.

கூடைப்பந்து போட்டியில் தங்கம் வெல்லும் குழுவாக அமெரிக்கா திகழ்கிறது. தென் கொரியாவை 105-64 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 'பி' பிரிவில் அமெரிக்கா, இவ்வெற்றியின் வழி வெற்றியாளராக வந்தது. ரஷியா குழு சீனாவை 94-78 என்று வெற்றி கொண்டது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| (I) | Junctional features. | 13 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 1 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | — |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 6 |
| □ | Wrong usage of punctuation marks. | 2 |
| ⧄ | Addition / Omission of a letter. | 2 |
| (\|) | Omission / Replacement of a word. | 1 |
| [I] | Unnecessary joining of words. | — |

கோலாலம்பூர், ஜூலை27

உலு கிள்ளான், தாமான் பிங்கிரான் யுகேயில் இரண்டு புதிய இந்தோனேசிய குடியிருப்புப் பகுதிகள் உருவாகி வருகின்றன.

அவற்றில் ஒன்று ஜாலான் பெங்கிரான் 8க்கு அப்பால் கட்டப்பட்டு வருகிறது. மற்றொரு சிறிய குடியிருப்புப் பகுதி ஜாலான் பெங்கிரான் 4க்கு அருகில் உள்ள சீனக் கல்லறை ஒன்றுக்குப் பக்கத்தில் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு மாதமாக கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லோரிகள் பெரிய குடியிருப்புப் பகுதிக்குச் செல்லும் சிறிய சாலை ஒன்றுக்குச் செல்வதற்காக ஜாலான் பெங்கிரான் எட்டைக் கடந்து செல்வது காணப்பட்டது.

இப்பகுதியில் 100க்கும் அதிகமான வீடுகள் உள்ளன.

ஜாலான் பெங்கிரான் 8ல் உள்ள குடியிருப்புப் பகுதி அருகில் உள்ள "கோத்தா பண்டுங்" என்று அழைக்கப்படும் பெரிய குடியிருப்புப் பகுதி ஒன்றுடன் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பல ஆண்டுகளாக இங்கு இருக்கும் இந்த குடியிருப்புப் பகுதி தாமான் அல் ரிதுவான் என்றழைக்கப்படும் மலிவு விலை வீடமைப்புத் திட்டதுக்கு முன்னால் உள்ளது.

இப்பகுதி முன்பு மலாய் குடிசைவாசிகள் குடியிருப்பாக இருந்தது என்றும் தங்களுக்கு மலிவு விலை வீடுகள் கிடைத்த பிறகு குடியிருப்பில் இருந்த வீடுகளை இந்தோனேசியர்களிடம் விற்கப்பட்டது அல்லது வாடகைக்கு விடப்பட்டது என்று இங்கு குடியிருப்பவர்கள் கூறினர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 3 |
| ___ | Unnecessary splitting of words. | 1 |
| Ø | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 7 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊠ | Addition / Omission of a letter. | 1 |
| (\|) | Omission / Replacement of a word. | 1 |
| (T) | Unnecessary joining of words. | – |

லங்காவி,ஜூலை.30-

தொழிற்சங்கங்கள் முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்ப்பதற்குப் பதிலாக, மலேசியா என்னும் நிறுவனத்தில் பங்காளிகளாக ஆவதன் மூலம், மலேசியாவை உண்மையிலேயே ஒரு வெல்ல முடியாத நாடாக ஆக்குமாறு பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் மகாதீர் முகமது நேற்று அறைகூவல் விடுத்தார்.

மலேசியாவின் மகத்
தான பொருளாதார வளர்ச்
சியை ஏற்படுத்திய மலேசியா
நிறுவனத்தின் மாபெரும் வெற்
றிக்கதையில் தொழிற்சங்கங்கள்
காணமல்போன பங்காளிகள்
என்று வருணித்த பிரதமர்,
தொழிற்சங்கத்தின் குறுகிய
கால நோக்கில் சம்பள
உயர்வே அவர்களுக்கு மிக
முக்கியம் என்று சொன்னார்.

"மலேசியா நிறுவனத்
தில் ஒரே ஒரு விஷயந்தான்
வருந்துதற்குரியது. ஒரு
பங்காளி காணப்படவில்லை.
தொழிற்சங்கங்களும் தொழி
லாளர்களும் உணர்வுடைய
பங்காளிகளாக இல்லை" என்று
நேற்றிரவு இங்கு லங்காவி பீச்
ரிசார்ட்டில் இரண்டாவது
லங்காவி அனைத்துலக உரை
யாடல் நிகழ்ச்சியைத் துவக்கி
வைத்துப் பேசுகையில் அவர்
கூறினார்.

இந்த உரையாடலில்
ஆறு அரசாங்கத் தலைவர்கள்
உள்பட 250 அரசாங்க உயர்
அதிகாரிகளும், தொழில்துறை
தலைவர்களும் கலந்து கொள்
கின்றனர் சாமர்த்திய பங்
காளித்துவம் என்னும் சிந்த
னைக்குப் புதிய உருவம்
கொடுத்து வர்த்தகத்தையும்
முதலீட்டையும் பெருக்குவது
குறித்து இந்த மூன்றுநாள்
கூட்டத்தில் அவர்கள் விவாதிப்
பர்.

சாமர்த்திய பங்காளித்
துவம் என்பதே இந்த
உரையாடலின் கருப்பொருள்.

மலேசியா நிறுவனம்
என்னும் உணர்விலான அணுக்க
ஒத்துழைப்பைத் தடுக்கிறது
தொழிற் சங்கங்களின் மனப்
பாங்கு என்று டாக்டர் மக
கூறினார்.

"தொழிற்சங்கங்கள் த
ளின் பாரம்பரிய போக்
கைவிட்டுவிட்டு, மலேசியா
வனத்தின் சாமர்த்திய
காளித்துவத்தில் சேர்ந்த
மலேசியா உண்மையிலே
வெல்ல முடியாததாக இ
கும்" என்று அவர் கூறினார்

டாக்டர் மகாதீர்
மராக ஆனபிறகு 1980 -க
அறிமுகப்படுத்தப்பட்டது
சியா நிறுவனம் என்னும்
தனை.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 2 |
| ___ | Unnecessary splitting of words. | – |
| ⊘ | Junction features | – |
| ǁ | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | 21 |
| \| | Unnecessary splitting of words. | |
| ☐ | Wrong usage of punctuation marks. | 6 |
| ☒ | Addition / Omission of a letter. | – |
| ɖ | Omission / Replacement of a word. | – |
| (T) | Unnecessary joining of words. | – |

சென்னை,ஜூலை30

சென்னை கோர்ட்டில் கைதி கொலை செய்யப்பட்ட வழக்கில் வெடிகுண்டு தயாரித் தவன் போலீசாரிடம் சிக்கி னான்.

இதைத் தொடர்ந்து இந்த வழக்கில் கைதானவர்கள் எண்ணிக்கை 19 ஆக உயர்ந் தது.

சென்னை எழும்பூர் கோர்ட்டில் கடந்த 4ஆம் தேதி கைதி விஜி படுகொலை செய்யப்பட்டான். 28 பேர் கொண்ட கும்பல் கோர்ட்டுக் குள் நுழைந்து வெடி குண்டு களை வீசினார்கள் விஜியை கோர்ட்டுக்கு உள்ளே வெட்டிக் கொன்றனர்.

இந்த ரவுடி கோஷ்டி கூலிப்படையினரை ஆட்டோ, கார் மற்றும் மோட்டார் சைக் கிளில் அழைத்து வந்தனர்.

2 ரவுடிகளுக்கு இடையே இருந்து வந்த மோதலின் ஒரு கட்டமாக இந்த கொலை நடந்துள்ளது.

இந்த கொலை தொடர்பாக ஏற்கனவே 16 பேரை போலீ சார் கைது செய்து இருந்த னர்.

## மேலும் 3 பேர் கைது

இப்போது சின்னா, ரபீக் உள்பட மேலும் 3 பேரை போலீசார் கைது செய்துள்ள னர். இதையும் சேர்த்து இந்த கொலையில் கைதானவர்கள் எண்ணிக்கை 19 ஆக உயர்ந் துள்ளது.

கைதான ரபீக் ரவுடி கோஷ்டிக்கு வெடிகுண்டு தயா ரித்து கொடுத்தவன் என்று கூறப்படுகிறது. இந்த கொலை யில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் ஆசைத்தம்பி, மனோ ஆகியோரை போலீசார் தேடி வருகிறார்கள். ஆசைத் தம்பியை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ⓘ | Junctional features. | 9 |
| —— | Unnecessary splitting of words. | - |
| ⊘ | Junction features | - |
| ll | Illogical / Incomplete sentence construction. | 1 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 13 |
| ☐ | Wrong usage of punctuation marks. | - |
| ☒ | Addition / Omission of a letter. | - |
| ф | Omission / Replacement of a word. | - |
| ◫ | Unnecessary joining of words. | - |

கோலாலம்பூர்,ஜூலை.31-
தற்காலிக வாகன
மோட்டும் லைசன்ஸ் பெற்ற
வர்கள் தங்கள் வாகனத்தின்
முன் பகுதியிலும் பின் பகுதி
யிலும் "p" அடையாள பட்
டையை பொருத்தியிருக்க
வேண்டும்.

இதற்கான சட்ட
திருத்தத்தை நேற்று தேவான்
ரூயாட் அங்கீகரித்தது.

முன்னதாக அம்
மசோதா மீதான விவாதத்தை
முடித்துவைத்து போக்குவரத்து
அமைச்சின் நாடாளுமன்ற
செயலாளர் சோர் சீ ஹீவெங்
பேசினார். தற்காலிக லைசன்ஸ்
பெற்றுள்ளவர்கள், 'டி' பிரிவு
வாகனங்களை மட்டுமே ஓட்ட
முடியும் என்றார் அவர்.

மோட்டார் ஓட்டிகளி
டையே அதிக அளவில் குடிமை
உணர்வையும் பொறுப்புணர்
வையும் ஏற்படுத்த இந்த தற்
காலிக லைசன்ஸ் முறை உத
வும் என்றார் அவர்.

சிறப்பு
எண்பட்டை

புதிய மசோதாவின் கீழ்,
3 மோட்டார் ஓட்டிகள் தனிப்
பட்ட பதிவு எண் பட்டைகளை
பயன்படுத்த அனுமதிக்கப்படு
வார்கள் என சோர் கூறினார்.

இத்தகைய எண்
பட்டையை பயன்படுத்த கட்ட
ணம் செலுத்த வேண்டும் என்ப
தால், இதன் மூலம் அரசாங்கத்
திற்கு கூடுதல் வருவாய்
கிடைக்கும்.

வளர்ந்த நாடுகளில்
இத்தகைய எண் பட்டைகள்
நீண்டகாலமாக பயன்படுத்தப்
பட்டு வருகின்றன.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 11 |
| — | Unnecessary splitting of words. | 2 |
| ⊘ | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | 1 |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 12 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ⊠ | Addition / Omission of a letter. | 1 |
| ф | Omission / Replacement of a word. | – |
| ⊞ | Unnecessary joining of words. | – |

கோலாலம்பூர், ஆக. 1

ஆகஸ்டு மாதம் 14 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை இங்கு நடைபெறவிருக்கும் 42 ஆவது கர்மன்வெல்த் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கங்களின் (சிபிஏ) மாநாட்டில் உலகின் செல்வத்துடன் நீதி யோகத்தை மலேசியா வலியுறுத்தும்.

மலேசியாவின் வெளியுறவுக் கொள்கை மற்றும் உலகின் செல்வம் எல்லா நாடுகளுக்கும் பயனளிக்க வேண்டும் என்ற பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் மகாதீர் முகம்மதுவின் கருத்துக்கு ஏற்ப இது இருக்கும் என்று சிபிஏ தலைவர் டான்ஸ்ரீ முகமது ஸாஹிர் இஸ்மாயில் நேற்று சொன்னார்.

பெரும்பகுதியான காமன்வெல்த் நாடுகள் தெற்கைச் சேர்ந்தவை. அதனால் பொருளாதார விஷயமொன்றுக்கு மலேசியா கவனம் செலுத்தும் என்று இம்மாநாட்டுக்கான மலேசிய சிபிஏ கூட்டத்திற்குத் தலைமையேற்ற பிறகு நிருபர்களிடம் அவர் சொன்னார்.

பெண்கள் உரிமைகள், சுற்றுப்பயணத்துறை, சிறுவர் கொடுமை மற்றும் சுரண்டல் ஆகியவையும் விவாதிக்கப்படவிருக்கும் [illegible] விஷயங்களில் அடங்கும் என்று [illegible] சபாநாயகருமான [illegible]

காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் நாடுகளில் ஜனநாயகத்தை மேம்படுத்தி நிலைநாட்டுவதும் விவாதிக்கப்படும் என்று அவர் சொன்னார்.

பொருளா[illegible]

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 1 |
| — | Unnecessary splitting of words. | 2 |
| ⊘ | Junction features | – |
| ll | Illogical / Incomplete sentence construction. | 2 |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \ | Unnecessary splitting of words. | 14 |
| ▢ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☑ | Addition / Omission of a letter. | 1 |
| ф | Omission / Replacement of a word. | – |
| ◫ | Unnecessary joining of words. | – |

மாந்தனைச் சீர்படுத்த வல்லது திருக்குறள். திருக்குறள் நன்னெறிக் கருத்துகள் உலகம் முழுவதும் பரவுதல் வேண்டும். இன்றைய மாணவர் சமுதாய நாளைய பொது மாந்தர் சமுதாயமாக உரு வெடுப்பதால் பள்ளி மாணவர் கள் மற்றும் இளந்தலைமுறை யினரிடையே இக்கருத்துகள் எடுத்துச் செல்லப்படுதல் வேண் டும். மனத்துக் கண் மாசிலாத சமுதாயம் தோற்றுவிக்கப்பட் டால் இம்மாநிலத்தில் பின்னர் <u>சிக்கல் களுக்கு</u> இடமேது ? மாந்தர் உள்ளொளிப் பெறவும் உலகம் அமைதியாகத் திகழவும் குறள் நெறிக் கருத்துகளை மக்கள் நலம் விரும்பும் எல்லா தரப்பினரும் பயிற்றுவிப்பதற்கு பரப்புவதற்கும் முயல வேண்டும்.

அவ்வகையில் மலேசி யத் தமிழ்ப் பண்பாட்டு இயக் கம் கடந்த ஏழாண்டுகளாகக் குறளியக் கருத்துகளைப் பொதுமக்களிடையே பரப்பி வருவதோடு, தலைநகர் பிரிக்பீல்ட்சில் அமைந்துள்ள தமிழ் பண்பகத்தின் வாயிலாகத் தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே குறள் நெறிக் கோட்பாடுகளை இசை யுடன் குறளோதும் வகுப்புகள் நடத்திப் <u>பரப்பி வருகின்றது</u>. மேலும் திருக்குறள்நெறி அடிப் படையில் எழுதப்பட்டுள்ள பல வகையான நூல்களைத் தமிழ கத்திலிருந்து தருவித்து மாண வர் சமுதாயமும் பொதுமக் களும் கற்றுணரும் வாய்ப்பினை யும் ஏற்படுத்தி வருகின்றது. பண்பாடுள்ள மாந்தர்கள் தோன்ற படிக்கும் கலசா ரத்தை உருவாக்கும் முனைப்பி லும் தமிழ்ப்பண்பகம் ஈடுபட்டுச் செயலாற்றி வருவதால் நன் னெறி நூல்களைப் பயிலவிரும் பும் பொதுமக்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ள லாம்.

மு. மணிவெள்ளையன்
பொதுச்செயலர்
மலேசியத் தமிழ் பண்பாடு
இயக்கம்

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 2 |
| — | Unnecessary splitting of words. | 2 |
| ⌀ | Junction features | 1 |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | — |
| ⬭ | Using the wrong English / Malay translation. | — |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 19 |
| □ | Wrong usage of punctuation marks. | 1 |
| ☒ | Addition / Omission of a letter. | 2 |
| ф | Omission / Replacement of a word. | — |
| ⎅ | Unnecessary joining of words. | — |

சிப்பாங், ஆக. 6

வியாபாரத்தில் ஏற்பட்ட
தகராற்றினால் கணவன் மனை
வியை கொடூரமாக கழுத்தினை
வெட்டி கொலை செய்திருக்கக்
கூடும் என்ற சந்தேகங்கள்
வலுப் பெற்றிருப்பதால் சிப்பாங்
மாவட்ட போலீஸ் பிரிவினர்
இக்கொடூரச் செயலைப் புரிந்
துள்ள நபர்களை கைது செய்
யும் நடவடிக்கையில் மும்முர
மாக இறங்கியுள்ளனர்.

சனிக்கிழமை இரவு
சுமார் எட்டு மணியளவில் சிப்
பாங் சாலாத் திங்கி எனும்
இடத்தில் சீன வர்த்தகர்களான
கணவனும் மனைவியும் இரத்த
வெள்ளத்தில் கிடந்தது கண்டு
இவ்வட்டார மக்கள் சிப்பாங்
போலீஸ் நிலையத்திற்கு தகவல்
கொடுத்துள்ளனர்.

தற்சமயம் சிரம்பான்
பொது மருத்துவமனையின்
சவப்பரிசோதனைக்காக சேர்க்
கப்பட்டுள்ள இத்தம்பதியினர்
சிரம்பான் ஜெயா எனும் இடத்
தைச் சேர்ந்தவர்கள் என்ப
துடன் இவர்கள் இருவரும்
தினசரி வேன் மூலம் காய்கறி
மற்றும் சமையல் பொருட்களை
விநியோகம் செய்து வந்தவர்
கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிப்பாங் மாவட்ட போலீஸ்
நிலையத்தின் ஓ.சி.பி.டி. அபு
பாக்கார் பின் ஜோஹாரியின்
ஆணையின் கீழ் மாவட்ட நிர்
வாகப் பிரிவு இன்ஸ்பெக்டர்
மகமுட் மற்றும் இன்ஸ்பெக்டர்
சுகாமி பின் யூனுஸ் தலை
மையிலான போலீஸ் குழுவினர்
இச்சம்பவம் குறித்து தீவிர
நடவடிக்கையை மேற்கொண்
டுள்ளனர்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 10 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ⊘ | Junction features | 2 |
| \|\| | Illogical / Incomplete sentence construction. | - |
| ⬭ | Using the wrong English / Malay translation. | - |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 13 |
| □ | Wrong usage of punctuation marks. | - |
| ⊡ | Addition / Omission of a letter. | 1 |
| ф | Omission / Replacement of a word. | - |
| ⊓⊓ | Unnecessary joining of words. | - |

வளர்ச்சி மற்றும் மக்கள் நலனுக்கென திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றை வகுத்து அவற்றைச் செயல்படுத்துவதில்லைதான் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது என்றார் அவர். “தேர்தல் காலத்தில் மட்டும் வேலைபார்க்கும் மற்றவர்களைப் போன்றவர்கள் அல்ல நாம். அது நம் பாணி அல்ல” என்றார் அவர்.

தமது 3 நாள் சரவா பயணத்தை முடித்துக் கொண்ட பிரதமர் நேற்று இங்கு நிருபர்களிடம் பேசினார்.

சரவாவில் சட்டமன்றத்தை கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்த நேரம் வந்துவிட்டதா எனக்கேட்டதற்கு, “நேரம் எப்பொழுதுமே சரியாகத்தான் இருக்கிறது எனக் கருதுகிறேன். ஏனெனில் நாம் தேர்தல் அடிப்படையில் மட்டும் பணியாற்றுவதில்லை. 5 ஆண்டு முழுவதும் பணியாற்றுகிறோம்” என்றார் அவர்.

சில சமயங்களில், தேர்தல் நெருங்கும் போது கூட, தனக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய, சுயநலவாதிகளால் திரித்துக் கூறப்பட்ட பாக்குன் நீர் மின்சாரத் திட்டம் போன்ற முடிவுகளை அரசாங்கம் செய்கிறது என்று அவர் சொன்னார்.

இருந்த போதிலும், மக்களின் நலனுக்காக தனது நடவடிக்கைகளைத் தற்காக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று அவர் கூறினார்.

சரவா சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் தேதியைப் பற்றிக் கேட்ட போது, இவ்விஷயத்தை முதல் அமைச்சர் டான்ஸ்ரீ அப்துல் தையிப் மாமுதுடன் விவாதித்திருப்பதாக டாக்டர் மகாதீர் சொன்னார்.

தேர்தலை நடத்துவதிலிருந்து நாம் தப்பித்து ஓட முடியாது. அது சரவா சட்டமன்றம் கலைக்கப்படுவதைப் பொறுத்திருக்கிறது. அதன் பிறகு 60 நாட்களுக்குள் தேர்தல் நிச்சயமாக நடத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

| Symbol | Types of Errors | Number of Errors |
|---|---|---|
| | **Systematic errors** | |
| ① | Junctional features. | 5 |
| — | Unnecessary splitting of words. | 1 |
| ∅ | Junction features | – |
| ‖ | Illogical / Incomplete sentence construction. | – |
| ⬭ | Using the wrong English / Malay translation. | – |
| | **Performance errors** | |
| \| | Unnecessary splitting of words. | 7 |
| □ | Wrong usage of punctuation marks. | – |
| ☒ | Addition / Omission of a letter. | 1 |
| ф | Omission / Replacement of a word. | 1 |
| ⊔ | Unnecessary joining of words. | – |